CHENNAI KONGU NANBARGAL MALAR

சென்னை
# கொங்கு
நண்பர்கள் மலர்

ஏர் 11 ● உழவு 02 ● திருவள்ளுர் ஆண்டு 2057 ● விலை ரூ.20/- ● பிப்ரவரி 2026 ● (தை-மாசி)

## திருச்செங்கோட்டில் ஓர் திருப்புமுனை



ஈ.ஆர்.ஈஸ்வரன்

MAXIS AXIS OF TRUST

Stanfab APPARELS PRIVATE LIMITED




AMMA NAANA




**Mr. V. R. Govindasamy**
**Mrs. G. Rajam**
Founders
**Ph: +91 94443 99199**

---

**M. Senthilraj**
CEO
**Ph: +91 94443 99998**

---

# ECR
# MRC NAGAR
# MADURAVAYOL

---

**No.100, Chamiers Road,**
**Teynampet,**
**Chennai - 600 018.**

**+91 98843 09993**

**ammanaana.staff@gmail.com**



## எழுந்திரு!

பாடசாலை போக வேண்டும் பாப்பா
எழுந்திரு
செல்வ பாப்பா எழுந்திரு
அழகு பையை நீயும் கையில் தூக்கிப்
பார்த்து நடந்திடு
செல்வ பாப்பா நடந்திடு
ஏடு நீக்கும் கல்விகற்க சிந்தையில்லையா
கண்ணே சிந்தையில்லையா
நீ கெட்டிகாரனாக வேண்டும்
விருப்பமில்லையா
கண்ணே விருப்பமில்லையா
கற்று நாட்டை உயர்த்த நெஞ்சில் கருத்துக்
கொள்ளாயா
அமுதே கருத்துக் கொள்ளாயா
பள்ளிக்கூடம் கனியின் தோட்டம் கனிகள்
வேண்டாமா
இன்பக் கனிகள் வேண்டாமா
உன் கையை வீசி நடக்க நீயும் முந்த
வேண்டாமா
கனியே முந்த வேண்டாமா
பாடசாலை போக வேண்டும் பாப்பா
எழுந்திரு
செல்வ பாப்பா எழுந்திரு

– கவிஞர் ஈரோடு தமிழன்பன்

10 ஆம் வகுப்பு 12ஆம் வகுப்பு
அரசு பொதுத்தேர்வு எழுதும்
மாணவ கண்மணிகளுக்கு
மனம் கனிந்த நல்வாழ்த்துக்கள்!

**Published & Edited by:**
The President on behalf of Kongu Nanbargal Sangam, Velli Vizha Illam, No. 34 Srinivasa Perumal Sannathi 1st Street, Royapettah, Chennai - 600014.
**Printed by:**
M.Shaik Dawood, Dawood Graphics,
No. 63, Muthu Mudali Street, Royapettah, Chennai - 600 014.



## நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

**தலைவர்**
**வீ.க.செல்வக்குமார்**
Chennal Mettex Lab Pvt. Ltd.
98410 78949

**செயலாளர்**
**M.அமராபதி**
Jairram Hi-Tech Products
94440 60885

**பொருளாளர்**
**C.கொங்குவேள்** Dharani Developers P.Ltd., (PGP Group)
98408 90034

**துணைத் தலைவர்கள்**
**R.சண்முகவேல்**
Sunbright Designers Pvt. Ltd.,
98410 22960

**V.P.வீரப்பன்**
Sengam Transport
94432 66610

**இணைச்செயலாளர்கள்**
**C.அரவிந்தன்**
K Labs Technology & Solutions Pvt. Ltd.,
98419 23808

**P.ரவி**
SKV Educational Institution's
9842754245

## செயற்குழு உறுப்பினர்கள்

**அருள் பொன்னுசாமி**
Ponmani Engineers Pvt. Ltd.,
9884022266

**V.R.பாலசுப்பிரமணியன்**
Advocate & Labour Law Consultant
94444 04593

**S.அன்பழகன்**
BISMARCK Business Network Advisor (India, UAE, Hong Kong)
98403 09394

**K.ஜெகதீசன்**
Unitech Gorup
91767 17131

**S.சீனிவாசன்**
Prim Drugs & Pharmaceuticals I.Pvt., Ltd.,
94440 18021

**N.P.இசையழகன்**
Ms. Esal & Co. Chartered Acou
94444 04595

**R.கந்தகார்த்திக்**
RKG & Sons Associates
90036 90695

**கதிர்வேல் கணபதியப்பன்**
ISSM Business School
98840 22255

**K.G.ஜோதீஷ்குமார்**
Athiappa Chemicals (P). Ltd.,
9442488000

**A.நடராஜன்**
NU-Tech Components
9789973123

**K.ஜெகன் நாதன்**
Sri Krishna Power Loom Society
94437 42696

**K.நித்தியானந்தன்**
Sri Devkrish Group
98422 29503

**விசா M.சன்முகம்**
Sri Ambika Nets
9944933311

**S.குணசேகர்**
BRT Spinner Pvt. Ltd.,
9366635141

**T.P.நடராஜன்**
V.M.D. Groups, Chithode
9842766789

**D.மாணிக்கவாசகம் சிவப்பிரகாசம்**
RAWS N-Greens Health Care (P). Ltd.,
9443745879

**பரமேஸ்வரி சின்னசாமி**
P&C Projects (P) Ltd.,
9444070033

Dr.**சண்முகப்பிரியா** MBBS
AGS Complex & Ware Houses,
7824880456

பதிப்பாளர்
கொங்கு நண்பர்கள் சங்கம்,
வெள்ளி விழா இல்லம்,
எண். 34 ஸ்ரீநிவாச பெருமாள் சன்னதி 1-வது தெரு,
ராயப்பேட்டை, சென்னை - 600014.

ஆசிரியர் குறிப்பு
வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.

# தலைவர் மடல்

அன்புடையீர் வணக்கம்! தை மாதம் பொங்கல் விழா, மாட்டுப் பொங்கல், திருவள்ளுவர் திருநாள், உழவர் திருநாள், கொங்கு நாட்டுப் பகுதிகளிலே பூப்பறித்தல் நோன்பு, ஏறு தழுவுதல் என வீர விளையாட்டுகளும் மற்றும் ஆங்காங்கே காணும் பொங்கலும் சேர்ந்து சென்ற மாதம் களை கட்டியது என்றால் அது மிகையில்லை !

குறிப்பாக பவானியில் இருந்து கொடுமுடி வரை காலிங்கராயன் கால்வாய் பாயும் பாசன பகுதியில் உள்ள உழவர் பெருங்குடி மக்கள் காலிங்கராயனுக்கு நன்றி செலுத்தும் விழாவாக தை ஐந்தாம் நாளை கொண்டாடி மகிழ்ந்தனர். வாய்க்கால் வழியே வரலாறு படைத்த காலிங்கராயன் தனது வாய்க்காலை நாட்டிற்கு அர்ப்பணித்த நாள் தான் தை ஐந்து! அந்த நாளை காலிங்கராயன் தினமாக அறிவித்து பத்து ஆண்டுகளுக்கு முன்பாக பஞ்சலிங்கம் உழவர் மன்றம் பஞ்சலிங்கபுரத்திலே காலிங்கராயன் தினமாக கொண்டாடிய நிகழ்வு இன்று மிகப்பெரும் விழாவாக காலிங்கராயன் பாயும் எல்லா ஊர்களிலும் முளைப்பாரி எடுத்து, கும்மி அடித்து கோலாகலாமாகக் கொண்டாடி வருவது பாராட்டுக்குரியது.

அதில் இந்த ஆண்டு முத்தாய்ப்பாக காலிங்கராயன் பாசன விவசாயிகளும் பஞ்சலிங்கம் உழவர் மன்றமும் இணைந்து காலிங்கராயன் கரை வழிகளிலே மாரத்தான் ஓட்டப்பந்தயத்தை நிகழ்த்தியது. அதில் ஈரோட்டு மாவட்ட ஆட்சியர் திரு.ச.கந்தசாமி ஐஏஎஸ் அவர்கள் கலந்து கொண்டு ஓடியது சிறப்பம்சமாகும். கிட்டத்தட்ட 8 கிலோமீட்டர் சுற்றளவு தூரத்திற்கு கால்வாய் கரைகள் பலப்படுத்தப்பட்டதோடு மக்களிடையே கால்வாய் நீரை அள்ளிப் பருக வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி அதை மாசு படுத்தாமல் இருக்க வேண்டும் என்ற உணர்வை தூண்டியயுள்ளது என்றால் அது மிகையில்லை.

காலிங்கராயன் கால்வாய் தூய்மைப் பணிக்காக சென்னை கொங்குநாடு அறக்கட்டளை ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்களைப் பற்றி அனைவரும் அறிந்த செய்தி, அவர் அண்ணா பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக இருந்தார் என்பதாகும். அவர் ஒரு சிறந்த அறிவியலாளர் என்பது மட்டுமல்ல தலை சிறந்த தமிழ் எழுத்தாளரும், கவிஞருமாவார். குலோத்துங்கன் என்ற புனைபெயரில் பல மரபுக் கவிதைகளை எழுதியுள்ளார். இந்த பூமிப் பந்தைப் பற்றி அவர் எழுதியுள்ள ஒரு அற்புதமான கவிதையை இந்த இதழிலே வழங்கி உள்ளோம்.

இந்த இதழில் அட்டை சொல்லும் செய்தியாக திரு ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்களைப் பற்றிய கட்டுரை வெளிவந்துள்ளது.

திரு.ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் 1998ல் நமது சங்கத்தில் நடந்த தேர்தலில் போட்டியிட்டு செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே அவரது சமுதாய பணிக்கு முதலில் வித்திட்டது நமது சங்கம் தான் என்பது குறிப்பிடத் தகுந்தது.

செயற்குழு உறுப்பினர் பொறுப்பில் இருந்து படிப்படியாக செயலாளர், துணைத் தலைவர் என்று பத்தாண்டுகள் பணியாற்றியவர்.

நம் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் எத்தனையோ பேர் எல்லா அரசியல் கட்சிகளில் இருந்தாலும், இவரது அரசியல் வருகை என்பது நமது கொங்கு நாட்டிற்கு தனித்த அடையாளத்தை ஏற்படுத்திக் கொடுத்தது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள்.

திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினராக தான் பதவி ஏற்றது முதல் அயராது பணி செய்து ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்திருக்கிறார்.

சட்டமன்றம் கூடிய எல்லா நாட்களிலும் தவறாமல் கலந்து கொண்டு ஒரு நாள் கூட விடுப்பு எடுக்காமல் சிறப்பாக சட்டமன்ற பணியை நிறைவு செய்திருக்கிறார்.

தான் சமுதாயப் பணியாற்ற அடிகோலியது கொங்கு நண்பர்கள் சங்கம் தான் என்பதை பெருமையோடு நினைவு கூர்வார். செய்யும் தொழிலே தெய்வம் என்ற வாக்கிற்கிணங்க தனது கட்டுமானத் தொழிலிலும், ஆயத்த ஆடைகள் ஏற்றுமதித் தொழிலிலும் சிறந்து விளங்குகிறார். தொழிலை கவனித்துக் கொண்டுதான் அரசியலிலும் ஈடுபட வேண்டும்; அரசியலே முழு நேரத்தொழிலாகக் கூடாது என்பதே அவர் அடிக்கடி கூறும் அறிவுரையாகும்.



குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத்தான் முந்துறும் (குறள் : 1023)

"தான் பிறந்த குடியை உயரச் செய்வேன்" என்று உறுதிபூண்டு உழைக்கும் ஒருவனுக்கு தெய்வ ஆற்றல் என்னும் இயற்கை இயல்பாற்றலும் கூட வரிந்து கட்டிக்கொண்டு அவனுக்கு முன்னே சென்று வழிகாட்டும்

என்று இக்குறளுக்குப் பொருளுரைக்கிறார் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள்!

அன்புடன்

வீ.க.செல்வக்குமார்
தலைவர்



# கொங்கு நண்பர்கள் சங்கம்

## சென்னை

(பதிவு எண் : 282/76)



## கொங்கு மகளிர் விடுதி

Sharing Room | Double Cot
CCTV | Wifi | Safety Secure
Bathroom Heater | Water Dispenser
Washing Machine | Two Wheeler Parking

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14
**chennaikongu@gmail.com**
**Ph : 044 - 4266 8046, Cell : 63839 85919**



## தங்கும் விடுதி




"திரன் சின்னமலை மாளிகை"
நெ,72, பீட்டர்ஸ் ரோடு
இராயப்பேட்டை,
சென்னை-600 014.
**chennaikongu@gmail.com**
**Ph : 044 - 4266 8046**
**Cell : 93815 45451**

AC Rooms | Double Cot
TV | CCTV | Wifi | Safety Secure
Bathroom Heater | Water Bottle
Towel | Water Dispenser

**Discount for Members**

## கொங்கு மாணவர் விடுதி




AC Rooms Available
Double Cot
CCTV | Wifi
Safety Secure
Bathroom Heater
Water Dispenser
Washing Machine
Two Wheeler Parking

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப் பெருமாள்
சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.
**chennaikongu@gmail.com**
**044 - 4351 0460 | Cell : 63839 85919**

# செயலாளர் கடிதம்

கொங்கு சொந்தங்களுக்கு வணக்கம்!!

இம்மடல் வாயிலாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி...

ஜனவரி 26 அன்று குடியரசு தின விழா சங்கத்தின் சார்பில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு நடைபெற்ற பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் சங்கத்தின் வரவு,செலவு கணக்குகள் பதிவுத் துறையில் பதிவேற்றம் செய்யப்பட சமர்ப்பிக்கபட்டுள்ளன என்பதை உங்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன்!

புத்தக வாசிப்பில் நாம் பெறும் பலன்கள் அளப்பரியவை..நமது அறிவை ,வாழ்வியல் அனுபவங்களை விசாலமாக்கி நமக்கு வழிகாட்டுபவை புத்தகங்களே!!

கொங்கு நண்பர்கள் சங்கத்தில் இயங்கி வரும் பெரியசாமி தூரன் நூலகம் புதுப் பொலிவுடன் சீரமைக்கப் பட்டுள்ளது என்கின்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்!

இதற்குப் பெரு முயற்சி மேற்கொண்ட சங்கத்தின் தலைவர் அண்ணன் திரு. வீ.க.செல்வகுமார் அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகிறேன்!! வெள்ளிவிழா மற்றும் கொங்கு நாடு இல்லங்களில் தங்கி போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் இளவல்களுக்கு இந்நூலகம் பெரும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயப்பாடில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமைச் செயலகத்திலிருந்து செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பாக

13.2.26 அன்று கரூர் எல்லைக் காட்டு ராமச்சந்திர புரம் கிராமத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் மதிப்பிற்குரிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.சி.முத்துசாமி அவர்களின் திருவுருவச் சிலையை காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார் திரு.சி.முத்துசாமி அவர்கள் விவசாயிகளின் நலனுக்காக அளப்பரிய செயலாற்றியவர்! காவிரி மீட்புக் குழுவில் இணைந்து போராடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



இப்போது பத்தாம் வகுப்பு மற்றும் 12- ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் உங்கள் மாணவச் செல்வங்கள் சிறப்பான முறையில் மதிப்பெண்கள் பெற என் மனப்பூர்வமான வாழ்த்துகள்!!

நன்றி வணக்கம்,

**எம்.அமராபதி**

செயலாளர்

# போற்றுகின்றோம்!





தை 05 காளிங்கராயன் நாள்! அன்று நமது சங்கத்தில் தலைவர் வீ.க.செல்வகுமார், இணைச் செயலாளர் சி.அரவிந்தன் மற்றும் சொந்தங்களுடன் காலிங்கராயன் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பத்ம பூசன் ம.ப.பெரியசாமித்தூரன் நினைவு நாள். 20.01.26 அன்று அவரது திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.




20.01.2026 அன்று தமிழறிஞர் பெரியசாமித்தூரன் நினைவு நாள் முன்னிட்டு சங்கத்தின் சார்பாக அவருடைய திருவுருவப்படத்திற்கு படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது

## பத்மபூசன் ம.ப.பெரியசாமித் தூரன் நினைவு நூலகம்



நமது சங்கத்தில் பத்மபூஷன் ம.ப.பெரியசாமி தூரன் நினைவு நூலகம் புதுப்பித்து குடியரசு தினத்தன்று செயலாளர் எம் அமராவதி, செயற்குழு உறுப்பினர்கள் ஜெகதீசன், கந்த கார்த்திக் மற்றும் சங்கத்தின் உறுப்பினர் பார்த்திபன் அவர்களுடன் திறந்து வைக்கப்பட்டது.



**HUMAN MIRROR TRUST** மற்றும் சித்தர்கள் கோட்டம் அகாடமி & ஆராய்ச்சி நிறுவனம், பாபநாசம் மற்றும் டாக்டர் வி.எஸ். நடராஜன் முதியோர் நல அறக்கட்டளை நடத்தும்

# முதியோர்பராமரிப்பு 3 மாதகாலசான்றிதழ்படிப்பு




பத்ம ஸ்ரீ முதியோர் நல மருத்துவர் வி.எஸ். நடராஜன் அவர்கள் அம்பத்தூர் அருகில் உள்ள ஆனந்தம் முதியோர் இல்லத்தில் 18-01-2026 அன்று தொடங்கி வைத்தார். அவர் பேசும் போது "வேலை இல்லாமல் இருக்கும் ஏழைக்குடும்பத்துப் பெண்களுக்கு வேலை கிடைக்கிறது. நோயுற்ற முதியவர்களுக்கு குறைந்த செலவில் பணியாளர்கள் கிடைக்கிறார்கள். ஒரேகல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் இத்திட்டம் மிகவும் பாராட்டுதலுக்குரியது" என்று புகழாரம் சூட்டினார்.

விழாவில் திரு.கே.லக்ஷ்மிகாந்தன் பாரதி, திரு.எம்.முத்துகுமாரசாமி, திரு. எஸ். செந்தூர்பாரி, திருமதி.பாகீரதி ராமமூர்த்தி, திருமதி.ராதா ஸ்ரீநிவாசன், திரு. ஸ்ரீநிவாசன், டி.கண்ணன் மற்றும் மூத்த குடிமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள்.

இந்த 3 மாத சான்றிதழ் படிப்பைப்பற்றிய மேலும் விவரங்களை அறிய திரு.எம். முத்துகுமாரசாமி (செல்:9380572282) அவர்களைதொடர்புகொள்ளவும்.

# குடும்ப விழா




ஓசூர் கொங்கு நண்பர்கள் நலச்சங்க குடும்ப விழாவில் நமது சங்கத்தின் முன்னாள் தலைவரும், கொங்குநாடு அறக்கட்டளையின் தலைவருமான திரு.கே. ஆர். அப்பாவு அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் சொல்லேர் உழவன் செல்லமுத்து அவர்கள் !


SUN-X CONCRETE
SUN-X CONCRETE INDIA PVT LTD
CHENNAI
OUR PRODUCTS
READY MIX CONCRETE | SOLID BLOCKS | AAC BLOCKS
AGGREGATE | FLYASH BRICKS
"Ramaniyam Ocean Isha", No11, 6th Floor, Old Mahabalipuram Road,Okkiyam Thoraipakkam,
Chennai - 600 096.
Call : 9003070704 | 9940400050
Email : sales@sunxconcrete.org
www.sunxconcrete.org



# குறைந்த இரத்த அழுத்தம்

**பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ்.நடராஜன்**
முதியோர் நல மருத்துவர். சென்னை

உயர் இரத்த அழுத்தம் பற்றி அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால் குறைந்த இரத்த அழுத்தம் என்றால் அது பற்றி பலருக்கும் தெரியாது. அதைப் பற்றி சற்று விவரமாகத் தெரிந்து கொள்வோம்.

## 1. குறைந்த இரத்த அழுத்தம்

இரத்த அழுத்தத்தின் மேல் அளவை Systolic அழுத்தம் என்றும், கீழ் அளவை Diastolic அழுத்தம் என்றும் கூறுவோம். முதுமையில் ஒருவருக்கு 140 / 90 அளவுக்கு மேல் இருந்தால் உயர் இரத்த அழுத்தம் இருப்பது தெரிந்து கொள்ளலாம். நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இரத்த அழுத்தம் 130 / 80க்குள் இருக்க வேண்டும்.

எந்த வயதானாலும் இரத்த அழுத்தத்தின் மேல் அளவு 120 -140, கீழ் அளவு 80 - 90 அளவில் தான் இருக்க வேண்டும்.

இரத்த அழுத்தம் மேல் அளவு 90க்கும், கீழ் அளவு 60க்கும் கீழே இருந்தால் அதை குறைந்த இரத்த அழுத்தம் என்பர். இதனால் உடல் உறுப்புகள் அனைத்திலும் பிராண வாயு செல்வது குறைந்துவிடும். இதன் விளைவு :

★ மயக்கம்

★ நிலை தடுமாறுதல்

★ கண் பார்வை மங்குதல்

★ குமட்டல்

★ பசியின்மை

★ கீழே விழுதல்

### காரணங்கள்

★ நீர் வறட்சி வாந்தி, பேதி, இரத்த வாந்தி

★ ஒவ்வாமை - பூச்சிக் கடி, பென்சிலின், சல்பா மருந்துகள்

★ மருந்துகள் – உயர் இரத்த அழுத்த மாத்திரை, நீர் மாத்திரை, தூக்க மாத்திரை, மன நோய்க்கான மாத்திரை

★ தாழ்நிலை சர்க்கரை

★ இதயம் பலவீனப்படுதல்

★ மது

★ தொடர்ந்து படுக்கையில் படுத்திருப்பவர்களுக்கு குறைந்த இரத்த அழுத்தம் வருவதற்கு வாய்ப்பு அதிகம். உதாரணம் : பக்கவாதம், உதறுவாதம், மறதி நோய், மூட்டுவலி ஆகிய நோய் உள்ளவர்கள்

**சிகிச்சை முறை**

★ குறைந்த இரத்த அழுத்தத்திற்கு மருந்து ஒரு காரணமாக இருந்தால் மருத்துவரின் ஆலோசனைப்படி அதை குறைக்கவோ அல்லது நிறுத்தவோ வேண்டும்.

★ நீர் வறட்சிக்கு குளுக்கோஸ், சலைய்ன் போன்ற திரவத்தை ஊசி மூலம் செலுத்தினால் குறைந்த இரத்த அழுத்தம் சரியான நிலைக்கு வந்துவிடும்.

★ உணவில் உப்பைச் சற்று அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

★ நிறைய தண்ணீர் அருந்த வேண்டும்.

★ இதய பலவீனம் மற்றும் நோய் தொற்று ஒரு காரணமாக இருப்பின் அதற்கு தக்க சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்

## 2. உடல் நிலைக்கு ஏற்றவாறு மாறுபடும் இரத்த அழுத்தம்

இரத்த அழுத்தத்தை படுத்த நிலையிலும், உட்கார்ந்த நிலையிலும் மற்றும் நிற்கும் நிலையிலும் பரிசோதனை செய்வதின் மூலம் குறைந்த இரத்த அழுத்தத்தை உறுதி செய்து கொள்ளலாம்.

ஒருவர் உட்கார்ந்த நிலையில் இருந்து எழுந்து நிறகும் பொழுது மேல் அளவு இரத்த அழுத்தம் 20 mmHg க்கும், கீழ் அளவு இரத்த அழுத்தம் 10 mmHg அளவிற்கும் குறைந்தால் அவருக்கு உடல்நிலை ஏற்றவாறு இரத்த அழுத்தம் குறைந்தது என்று கூறலாம். இதனால் மூளைக்கு செல்லும் இரத்த ஓட்ட குறைவால் மயக்கம், நிலை தடுமாறுதல், கீழே விழுதல் போன்ற தொல்லைகள் ஏற்படும்.

**சிகிச்சை முறை**

★ படுத்திருக்கும் போதோ அல்லது உட்கார்ந்து இருக்கும் போதோ எழும்போது மெதுவாக எழவேண்டும்

★ தண்ணீர் அதிகம் பருக வேண்டும்

★ உடல் நிலையில் மாறுபாடு ஏற்படும் போது குறைந்த இரத்த அழுத்தம் ஏற்பட்டால் படுக்கையிலிருந்து மெதுவாக எழுந்து, உட்கார்ந்து, பின்பு எழுந்து நிற்க வேண்டும்.

★ தொடர்ந்து படுக்கையில் படுத்திருப்பவர்களுக்கு குறைந்த இரத்த அழுத்தம் வர வாய்ப்பு அதிகமிருப்பதால் முடிந்தளவிற்கு கை கால்களை அடிக்கடி அசைத்து, உடற்பயிற்சி செய்து கொள்ள வேண்டும். தேவைப்பட்டால் இயன்முறை சிகிச்சை செய்து கொள்வது நல்லது.



விண்ணில் நான்

பறந்த.போதும்

அலை நீரில்

மிதந்த .போதும்

நீள் நிலத்தில்

ஊர்ந்த.போதும்

அண்ட சராசாரமதில் விழி

நிலைத்தபோதும்

மன வெளி காடுகளில்

திரிந்த போதும்

நுண்ணிய நூல்.பல

ஆய்ந்த போதும்

ஆன்றோர் உரையை செவி

மடுத்த போதும்

வாரா அமைதி முதிரா

பக்குவம், உள்ளம்

தளர, உடல் திறன் குறைய

மூப்புற்ற உறவும் நட்பும் சொல்லாமல்

விடை பெற

வந்துற்றது எங்ஙனம்?

மானிட வாழ்வு

நீர்க்குமிழி என உணர்ந்தது

எவ்வண்ணம்?

உதித் தெழுந்து கனன்று

வீழ்ந்து குளிரும்

ஓர் நாள் பகலவன்

வாழ்வே நமதோ ?

பகர்வீர். பாரோரே ?

"வாழி நலம் சூழ. ,!"

-கவிஞர் கலாப்ரியன்

சுப நிகழ்ச்சிகள்

# ஈரோடு ஜி எலைட் நடத்திய எழுதிங்கள் சீர் விழா







G – Elite . கவுண்டர் எலைட் அசோசியேசன் சார்பாக ஏழாவது முறையாக எழுதீங்கள் சீர் விழா கடந்த தை 14 ம் தேதி 28/01/2026. புதன்கிழமை ஈரோடு சத்தி ரோடு விவாக லட்சுமி திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் நம் குல பெண்கள் 16 பேர் எழுதிங்கள் செய்து கொண்டார்கள்.

அருமைப் பெரியவர் திரு. சோமசுந்தர கவுண்டர், பயிரன்குலம் அவர்கள் தலைமையேற்று அனைத்து சீர்களையும் செய்து சிறப்பாக செய்து முடித்தார்கள்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக அக்னி ஸ்டீல்ஸ் திரு .சின்னசாமி, சிடி மில் திரு.குமார் அவர்கள் இருவரும் தத்தம் இணையருடன் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி விழாவை தொடங்கி வைத்தார்கள். ஈரோட்டின் சீர்மிகு பெருமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள்.

இந்த விழாவில் நமது குல ஆண்கள், பெண்கள் அனைவரும் இணைந்து, அனைத்து உறவுகளுக்கும் ஆனந்தமாக உணவு பரிமாறி விருந்தோம்பல் நல்கியது சிறப்பம்சமாக அமைந்தது.




## வேண்டுகோள்!

வரும் மார்ச் 08 மகளிர் தினம் வருவதை முன்னிட்டு நமது கொங்கு நண்பர்கள் மலர் மகளிர் சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது. எனவே கல்வியில், தொழிலில், உயர் பணியில் சாதனை படைத்துக் கொண்டிருக்கும் கொங்கு மகளிர்களைப் பற்றிய சிறு கட்டுரைகள் **chennaikongu@gmail.com & whatsapp No: 63839 85919**-ல் வரவேற்கப்படுகின்றன.

கவிதை...

# அன்னையே ஓர் ஐயம்

இயற்கை அன்னையே!
தன்னையும் வருத்தி, தாழாது உழைத்து
உன்னையும் வருத்தினால் தானே உதவுகிறாய்
இதுஉன் குணமா அல்லது கொள்கையா?

பாய்போல் விரிந்தும், படர்ந்தும், இருக்கும்
தாய் நின்னுடைத் தங்க மேனியை
மேழி கொண்டு கீறினால்தானே
விளைநில மாகிறாய்?
நடுங்கும் வரையும் நனைத்தால் தானே
நன்செய் ஆகிறாய்?

ஊற்று நீரை ஒளித்துவைத் திருக்கிறாய்
தோற்றுதல் என்னவோ தோண்டினால்தானே?
ஆற்றல்சேர் நிலக்கரி: அணிசெய் தங்கம்
இவற்றை
எட்டுதற் கியலா இடத்தில் அல்லவா
இருப்பு வைத்து இருக்கிறாய்: உனை
வெட்டு பவர்க்கே வேண்டுவ தருகிறாய்
அணுவினால் உலகை ஆக்கினாய் அஃதெம்
கையிலா கிடைக்கிறது? கண்ணுக்கா தெரிகிறது?

அளப்பதற்கிலா ஆற்றலை அணுவுள் வைத்தாய்
பிளப்பவர் தானே பெறலாம் என்கிறாய்
அன்னையே,
இதுஉன் குணமா அல்லது கொள்கையா?

இயற்கை அன்னையே!
தன்னையும் வருத்தித் தாழாது உழைத்து
உன்னையும் வருத்தினால்தானே உதவுகிறாய்
இதுஉன் குணமா அல்லது கொள்கையா?

கவிதை ஆக்கம்:
குலோத்துங்கன்
(முனைவர் வா.செ. குழந்தைசாமி )



# SM HR Service
# ESAIBALU HR Service

## ESI, EPF & Labour Law Consultancy

*All Services Under One Roof*

- Registration
- Monthly Compliance & Follow-up
- Inspection

### OUR SERVICES

- ESI Act
- EPF Act
- Factories Act
- Shops & Establishments Act
- Professional Tax
- Contract Labour Act
- TN Labour Welfare Fund Act
- Payroll Processing
- MSME Registration
- BOCW / ISMW Act
- FSSAI Registration
- Fire License
- DSC Token

**CONTACT US :**

Lion's Club Building, No.23, Ramar Kovil Street, Nandambakkam,
Chennai - 600 089. Phone : 044-2233 1151 / 52

Mobile : 94444 04593, 95000 24593
Email : smhrbalu@gmail.com

சிறார் தொடர்கதை

எழுதியவர்: பெ.தூரன்



# சங்ககிரிக் கோட்டையின் மர்மம்

## முரடர்களுடன் வாக்குவாதம்!

## 14

தானியக் கிடங்கில் அந்த நான்கு பேரும் இறங்கும் சமயத்தில் தங்கமணி, சுந்தரம், கண்ணகி ஆகிய மூவரும் அங்கு போய்ச் சேர்ந்தார்கள். அந்த நான்கு பேரில் ஒருவன் வண்டிக்காரன் என்பதும் தெரிந்துவிட்டது.

"ஏண்டா, வண்டிக்காரனாக நடித்து அந்தப் பெட்டியைத் திருடிக் கொண்டு வந்து விட்டாயா?" என்று சுந்தரம் கோபமாகக் கேட்டான்.

வண்டிக்காரன் மௌனமாக இருந்தான்.

"அதைக் கேட்க நீ யாரடா?" என்று மற்ற மூவரில் ஒருவன் அதட்டினான். "சும்மா மிரட்டப் பார்க்காதே. கடைசியில் கம்பி எண்ண வேண்டிவரும்" என்றான் சுந்தரம். தங்கமணியும் கண்ணகியும் அந்த நால்வரையும் திருடர்கள் என்று குற்றம் சாட்டினார்கள்.

வாக்கு வாதம் வளர்ந்தது. அந்த முரடர்கள் இவர்களைச் சுலபமாக கட்டிப் பிடித்துக் கொண்டார்கள். இவர்களால் அவர்கள் பிடியிலிருந்து தப்பவே முடியவில்லை.

நான்கு பேரும் ஏதோ தங்களுக்குள் பேசிக்கொண்டு பாதாளச் சிறையின் மேல் பக்கத்திலுள்ள மரக்கதவைத் திறந்து அவர்களை உள்ளே தள்ளி மறுபடியும் கதவை மூடி விட்டார்கள்.

நல்ல வேளையாக உள்ளே மணல் நிறையப் போட்டிருந்ததால் ஆறடி ஆழத்திற்கு விழுந்தாலும் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

தங்கமணியை உள்ளே தள்ளுவதற்கு முன்பு அவன் ஜின்காவுக்கு சைகை செய்துவிட்டான். அத்துடன் பின்னால் தள்ளப்பட்ட சுந்தரத்தையும், கண்ணகியையும் சாமர்த்தியமாகப் பிடித்து அவர்களுக்கு எவ்விதமான காயமும் ஏற்படாமல் பார்த்துக் கொண்டான்.

இதுவரையிலும் நடந்த விஷயங்களை யெல்லாம் ஜின்கா, ஒரு மரத்தின் மீது அமர்ந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தது.

அந்த நான்கு முரடர்களும் தானியக் கிடங்கில் இறங்கி மறைந்தார்கள், அதுவரையிலும் பதுங்கியிருந்த ஜின்கா உடனே தங்கமணி கொடுத்த சம்புடத்தை வாயில் போட்டுக் கொண்டு தாவித் தாவி கீழே வேகமாக இறங்கியது. பாட்டியின் வீடு வந்ததும் அந்த சம்புடத்தில் இருந்த கடிதத்தைப் பாட்டியிடம் எடுத்துக் கொடுத்தது.



# போலீஸுக்குத் தகவல்!

## 15

அந்தக் கடிதத்தில் போலீஸ் ஸ்டேஷனுக்கு உடனே தெரியப்படுத்தி நான்கைந்து ஜவான்களோடு சப்–இன்ஸ்பெக்டரையும் உடனே மலை உச்சிக்கு வரும்படி எழுதியிருந்தது. வரும்போது ஒரு நூலேணியும் கொண்டு வந்தால் நலம் என்றும், உடனே செய்யாவிட்டால் தங்கள் உயிருக்கு ஆபத்து என்றும் எழுதியிருந்தது. பாட்டியை ஜின்காவும் அவசரப்படுத்தியது.

கண்ணுப் பாட்டிக்கு மனதில் கொஞ்சம் திகில் உண்டாகியது. அதனால் அந்த ஊரில் உள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு உடனே ஓடினாள். சப்–இன்ஸ்பெக்டரிடமும் விவரத்தைத் தெளிவாகச் சொன்னாள்.

சப்–இன்ஸ்பெக்டர் இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டார். ஆகவே துப்பாக்கி தாங்கிய ஐந்து ஜவான்களோடு தாமும் மலை மீது வேகமாக ஏறினார். ஜின்கா அவர்களுக்கு வழி காட்டியாக முன்னால் நடந்தது. அவர்கள் மலை உச்சியை அடைவதற்கும் அந்த நான்கு. முரடர்களும் புதையலை எடுத்துக் கொண்டு மேலே வருவதற்கும் சரியாக இருந்தது. வரைபடத்தை சரியாகப் புரிந்து கொள்ள முடியாமல் அவர்கள் பல இடங்களில் தோண்டிப் பார்த்திருக்கிறார்கள், அதனால் அவ்வளவு நேரம் ஆகிவிட்டது.

அந்த நால்வரையும் போலீசார் கைது செய்து அவர்கள் கையில் விலங்கிட்டார்கள். எப்படிப் போலீஸ் அங்கே வந்தது என்பது அவர்களுக்கே ஆச்சரியமாக இருந்தது.



# காலிங்கராயன் கால்வாய் விழிப்புணர்வு மாரத்தான்

**'வா**ய்க்கால் வழியே வரலாறு படைத்த காலிங்கராயன்' தான் வெட்டிய கால்வாயை நாட்டுக்கு அர்பணித்த நாள் தான் தை மாதம் ஐந்தாம் நாள்!

அந்நாளை நினைவு கூர்ந்து காலிங்கராயனுக்கு நன்றி பாராட்டும் விழாவாக ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் 05 ஆம் தேதி காலிங்கராயன் தின விழாவாக காலிங்கராயன் பகுதி விவசாயிகள் கொண்டாடி வருகிறார்கள்.

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த விழாவானது தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

இதன் அடுத்த கட்டமாக இந்த ஆண்டு முதன்முறையாக காலிங்கராயன் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது. இதில் சுமார் 1500 நபர்கள் சிறார் முதல் பெரியவர்கள் வரை மகளிர், குழந்தைகள், இளைஞர்கள் என அனைவரும் ஆர்வமுடன் பதிவு செய்து கலந்து கொண்டனர். 18.01.2026 ஞாயிறன்று காலை ஐந்து மணி முதலே சாரை சாரையாக ஓட்ட நாயகர்கள் வரத் துவங்கி, சரியாக 06 மணி 15 நிமிடத்திற்கு சிறப்பு விருந்தினர்கள் கொடியசைத்து



ஓட்டத்தை துவக்கி வைக்க, ஓடத் துவங்கினார்கள். இந்த ஓட்டத்தில் உள்ள சிறப்பு ஆறு கிலோமீட்டர் தூரம் காலிங்கராயன் வாய்க்கால் கரையிலேயே மாரத்தான் வீரர்கள் ஓடியது. இதற்காக ஏறத்தாழ 8 கிலோமீட்டர் நீளத்திற்கு காலிங்கராயன் வாய்க்கால் கரையை தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து காலிங்கராயன் விவசாயிகள் தூய்மைப்படுத்தி, பலப்படுத்தி உள்ளார்கள்.

இந்த சிறப்புமிகு விழாவில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கந்தசாமி ஐ.ஏ.எஸ் அவர்கள் கலந்து கொண்டு துவக்கி வைத்ததோடு மட்டுமல்லாமல், தானும் ஐந்து கிலோ மீட்டர் தூரம் மாரத்தான் ஓட்டத்தில் பங்கேற்று ஓடியது மிகவும் உணர்வு




பூர்வமாகவும், பங்கேற்பாளர்களுக்கு உற்சாகமூட்டுவதாகவும் அமைந்தது.

ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் திரு கே. இ .பிரகாஷ் அவர்களும், மொடக்குறிச்சி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. கே.



சரஸ்வதி சார்பாக அவருடைய மகன் திரு. சிவகுமார் மற்றும் மருமகள் கிருத்திகா அவர்களும் கலந்து கொண்டார்கள். இதில் அவரது மகன் திரு . சிவகுமார் மாரத்தான் ஓட்டத்திலும் கலந்து கொண்டு ஓடினார். சங்கத் தலைவர் திரு வீ.க. செல்வக்குமார் அவர்களும், கொ.ம.தே.க திரு.சூரியமூர்த்தி அவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

இதில் முத்தாய்ப்பாக காலிங்கராயனின் வாரிசுள் திரு. அருண் காலிங்கராயன் மற்றும் திரு. சித்தார்த் காலிங்கராயன் அவர்கள் இருவரும் பொள்ளாச்சியில் இருந்து வந்திருந்து வெற்றி பெற்றவர்களுக்கு நினைவுப்பரிசுகளை வழங்கி அவர்களை கௌரவித்ததோடு ,விவசாயிகளுக்கும் பெருமை சேர்த்தார்கள்.

இந்த விழாவை பஞ்சலிங்கம் உழவர் மன்றம் மற்றும் காலிங்கராயன் பகுதி விவசாயிகள் இணைந்து மிகச் சிறப்பாக நடத்தினார்கள்.

இந்த நிகழ்வு உண்மையிலேயே காலிங்கராயன் வாய்க்கால் பற்றி மக்களிடம் ஒரு நல்ல புரிதலும், மிகுந்த அர்ப்பணிப்பு உணர்வும் ஏற்பட்டு நாமும் இந்த கால்வாயை இணைந்து காக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

"கால்வாய் நீரை அள்ளிப் பருகுவோம்". காப்போம் – காலிங்கராயனை!






**சிந்தனைக் கவிஞர் கவிதாசன்**

இயக்குனர் மற்றும் தலைவர் மனிதவள மேம்பாட்டுத்துறை
ரூட்ஸ் நிறுவனங்கள், கோவை மற்றும் செயலாளர்,
சச்சிதானந்தா ஜோதி நிகேதன் பன்னாட்டு பள்ளி, கல்லார்,
மேட்டுப்பாளையம், கோவை.

# 05

# சவால்களுக்குச் சவால் விடுங்கள்

வாழ்க்கை என்பது பூந்தோட்டம் வேர்பிடிக்கும் வரை போராட்டம்

"போராட்டமில்லாத வாழ்க்கை உப்பில்லாத உணவு போல இருக்கும் அதில் சுவை இருக்காது" என்கிறார் மேதகு அப்துல்கலாம் அவர்கள். ஆகவே பிரச்சனைகளையும் சவால்களையும் கண்டு பின்வாங்காமல் சவால்களுக்குச் சவால்விடும் துணிச்சலுடன் முன்னேறிச் செல்ல வேண்டும்.

மூன்று விதமான மனநிலையுள்ள மனிதர்களை நாம் பார்க்கலாம். ஒன்று பலவீனமான மனநிலையை கொண்டவர்கள், இரண்டாவதாக சமமான மன நிலையை கொண்டவர்கள், அடுத்ததாக வலிமையான மனநிலை கொண்டவர்கள். பலவீனமான மனநிலையை கொண்டவர்கள் எல்லாவற்றையும் பிரச்சனையாகக் கருதி உள்ளூரப் பயப்படுவதுடன், எதையும் எதிர்கொள்ளத் தயங்குவார்கள் அல்லது அதுபோன்ற சூழலைத் தவிர்த்து விடுவார்கள். அவ்வாறு அச்சப்படும் மனிதர்களால் எத்தகைய சாதனையையும் படைக்க முடியாது. பிறந்தோம் இருந்தோம் இறந்தோம் என்று ஒரு சாதாரண வாழ்க்கை வாழ்ந்து எந்தவிதமான அடையாளத்தையும் சமுதாயத்தில் ஏற்படுத்தாமல் விதி வந்தால் உதிர்ந்துவிடும் சருகு போன்றவர்கள்.

இரண்டாவது ரக மனிதர்க்ள், எளிதான முயற்சிகளை எடுப்பார்கள். கொஞ்சம் கூடுதலாக உழைக்க வேண்டுமென்றாலும் நமக்கெதற்கு வம்பு என்று ஒதுங்கிக் கொள்பவர்கள். தோல்வியைத் தாங்கிக் கொள்ளும் துணிவற்றவர்கள். கடந்த காலத்தில் நிகழ்ந்த மகிழ்ச்சியற்ற நினைவுகளையும் மனக் காயங்களையும் நெஞ்சில் சுமந்து நிகழ்காலத்திலும் மனரீதியாக வேதனையை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள். இவர்களிடம் முயற்சி இருந்தாலும் துணிச்சல் இருக்காது.

அடுத்த நிலை மனிதர்கள் வலிமையான மனமும் மனம் முழுக்க நம்பிக்கையும்

துணிச்சலும் கொண்டவர்கள், இத்தகைய தங்களிடமுள்ள திறமையையும் புதுப் புதுச் சிந்தனையையும் துணிச்சலுடனும் தன்னம்பிக்கையும் செயல்படுத்தும் உத்வேகம் உள்ளவர்கள். எத்தகைய சவால் என்றாலும் மோதிப் பார்ப்போம்; வென்றால் பரிசு, தோற்றல் அது அனுபவம் என்ற மனநிலையில் எதையும் எதிர் கொள்ளும் வல்லமை மிக்கவர்கள்.

நீங்கள் எந்த வகை மனிதர் என்பதை எண்ணிப் பாருங்கள். முதல் வகை என்றால் கடந்த காலத்தில் நிகழ்ந்த கசப்பான நிகழ்வுகளும் தோல்விகளும் தான் உங்களை இந்த மனநிலைக்கு தள்ளியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். தோல்வி மேல் தோல்வி நேர்ந்தாலும் துணிந்து போராடிய மனிதர்களே உலக வரலாற்றை அலங்கரித்துக் கொண்டுள்ளார்கள்.

எடுத்துக்காட்டாக, அமெரிக்கா நாட்டின் மிகவும் புகழ் மிக்க முன்னாள் அதிபர் ஆப்ரகாம் லிங்கன் அவர்களைக் குறிப்பிடலாம். தனது இளமைக் காலம் முதல் பல்வேறு தோல்விகளைச் சந்தித்தார். ஆம், தோல்வி மேல் தோல்வி புயலாக வீசிய போதும் மனந்தளராமல் துணிச்சலுடன் போராடி தொடர்ச்சியான 48 தோல்விகளுக்குப் பிறகு அமெரிக்கா நாட்டின் அதிபரானார் என வரலாறு கூறுகிறது.

ஆகவே, சின்னச் சின்ன தோல்விகளையும் ஒரு படிப்பினையாகக் கொண்டு தொய்வின்றி முயன்று கொண்டிருப்பவர்கள்தான் வெற்றி பெறுகிறார்கள். ஆம்! வீழ்வதில் தவறில்லை வீழ்ந்தே கிடப்பதுதான் தவறு. ஆகவே தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்தெறிந்து விட்டு ஆனது ஆகட்டும் போராடிப் பார்ப்போம்" என்று துணிவுடன் எழுந்திருங்கள், முயன்றிடுங்கள், வென்றிடுங்கள், வாழ்வது ஒரு முறை துருப்பிடித்துத் தேய்வதை விட உழைத்துத் தேய்வதே உயர்வானது.

இரண்டாம் வகை மனிதர்கள் பாதுகாப்பற்ற மனநிலையில் இருப்பவர்கள். சிறுவயது முதல் ஊக்குவிப்பின்றி வாடிப் போனவர்கள். விமர்சனங்களுக்குப் பயந்து எந்தவித முயற்சி யையும் மேற்கொள்ளாதவர்கள். தோல்வி நேர்ந்து விடுமோ என்ற அச்சத்தில் கடினமானவற்றை எதிர்கொள்ளத் தயங்கி ஒதுங்கி கொள்பவர்கள்.

நீங்கள் இவ்வாறான மனநிலையில் உள்ளவராக இருந்தால், சற்று சிந்தித்துப்பாருங்கள். தோல்வியை சந்திக்காமல் யாரும் வெற்றிச் சிகரத்தைத் தொட்டதில்லை. தோல்வியில் பாடம் படிக்க வேண்டுமே தவிர தோல்வியை கண்டு முடங்கி விடக்கூடாது. முயற்சிக்கு முழுக்குப் போட்டு விடக்கூடாது.

பத்துமுறை வீழ்ந்தவனைப் பார்த்து பூமி சொன்னதாம், நீ ஏற்கனவே ஒன்பது முறை எழுந்தவன் தானே என்று. ஆகவே தோல்வியைக் கண்டு பின்வாங்காமல், தோல்வி ஏன் நேர்ந்தது என்று விருப்பு வெறுப்பற்ற மனநிலையில் ஆய்வு செய்து பாருங்கள். அதாவது உங்களுடைய தயாரிப்பு போதவில்லையா? தகுந்த சூழல் அமைய வில்லையா? உழைப்பும் முயற்சியும் போதவில்லை என்பன போன்ற 360 டிகிரியில் அலசி ஆராய்ந்து பாருங்கள்.

பின்னர் அவ்வாறான குறைபாடுகளை எவ்வாறு சரி செய்து கொள்வது என்று திட்டமிட்டு அவற்றைச் சரிசெய்து கொண்டு மீண்டும் துணிச்சலுடன் செயலாற்றத் தொடங்குங்கள். அத்துடன் வெல்வது உறுதி என்ற நம்பிக்கையுடன் உழைக்கத் தொடங்குங்கள். ஆம்! தொட்டுவிடும் தூரத்தில் தான் வெற்றி இருக்கிறது.

மூன்றாம் நிலை மனிதராக நீங்கள் இருந்தால், எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உண்டு. என்றாலும், இத்தகையோருக்கு இருக்கும் நம்பிக்கை சில நேரங்களில் அதீத நம்பிக்கையாக மாறிவிடும் அபாயமும் உண்டு. தொடர்ந்து வெற்றிக்கு மேல் வெற்றி வந்தால் எச்சரிக்கையும் பணிவும் மிகவும் முக்கியம் என்பதை உணர்ந்து கவனமாகவும் பாதுகாப்புணர்வுடன் செயலாற்றுவது மிகவும் முக்கியம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நல்வாழ்த்துக்கள்.

வெற்றி வந்தால் பணிவு அவசியம்

தோல்வி வந்தால் பொறுமை அவசியம்

எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம்

எதுவந்தாலும் நம்பிக்கை அவசியம்

-மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

## ஈ.ஆர்.ஈஸ்வரன்

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி
பொதுச் செயலாளர்
திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்


# சங்க செயற்குழு உறுப்பினரிலிருந்து சட்டமன்றப் பேரவை உறுப்பினர் வரை

**1961** ஆம் ஆண்டு அப்போதைய சேலம் மாவட்டம் இன்றைய நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தாலுகா, காவேரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள கொக்கராயன்பேட்டை என்ற மிகச் சிறிய கிராமத்தில் பிறந்தார். மிகச் சிறிய கிராமம் என்று சொன்னால் பேருந்து வசதி கிடையாது. ஒரு வீட்டில் கூட ஒரு சிறிய இருசக்கர வாகனம் கூட கிடையாது. சைக்கிள் இருப்பதே வசதியான குடும்பமாக பார்க்கப்பட்ட காலம் அது.100% விவசாயத்தை நம்பி வாழ்ந்த ஒரு அழகான 1961 1961 ஆம் ஆண்டு அப்போதைய சேலம் மாவட்டம் இன்றைய நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தாலுகா, காவேரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள கொக்கராயன்பேட்டை என்ற மிகச் சிறிய கிராமத்தில் பிறந்தார். மிகச் சிறிய கிராமம் என்று சொன்னால் பேருந்து வசதி கிடையாது. ஒரு வீட்டில் கூட ஒரு சிறிய இருசக்கர வாகனம் கூட கிடையாது. சைக்கிள் இருப்பதே வசதியான குடும்பமாக பார்க்கப்பட்ட காலம் அது. 100% விவசாயத்தை நம்பி வாழ்ந்த ஒரு அழகான கிராமம். கொக்கராயன்பேட்டையில் இருந்த நடுநிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படித்து, பிறகு அங்கிருந்து 7 கிலோமீட்டர் தொலைவில் உள்ள விட்டம்பாளையம் என்ற கிராமத்திலிருக்கிற உயர்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு வரை படித்தார். நல்ல மதிப்பெண்களோடு தேர்ச்சி பெற்று ஈரோடு சிக்கையன் நாயக்கர் கல்லூரியில் PUC படித்து, சேலம் அரசு பொறியல் கல்லூரியில் Mechanicalபிரிவில் பொறியியல் கல்வியை 1983 ஆம் ஆண்டு முடித்தார் ஆறு மாத காலம் ராணிப்பேட்டையில் ஒரு நிறுவனத்தில் பணியாற்றி பின்பு அஸ்ஸாம் மாநிலத்தில் கிடைத்த ஒரு வாய்ப்பில் வேலையில் சேர்ந்து 1985 ஆம் ஆண்டு மே மாதம் வரை பணியாற்றினார். கொங்கு மண்ணின் வித்தாக ஏதாவது தொழில்செய்து முன்னேற வேண்டும் என்ற நோக்கில் அஸ்ஸாமிலேயே Mechno Erectorsஎன்ற நிறுவனத்தை ஆரம்பித்து பைப்லைன் அமைக்கின்ற ஒப்பந்தங்களையும், Boilerஅமைக்கின்ற ஒப்பந்தங்களையும் எடுத்து சொந்தமாக தொழில் செய்து வந்தார். சென்னையில்1987 களில் இருந்து கட்டுமான தொழிலிலும், ஆயத்த ஆடை ஏற்றுமதி தொழிலிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தற்போது MAXIS CONSTRUCTION என்ற கட்டுமான நிறுவனத்தையும், STANFAB APPARELS ஆயத்த ஆடை ஏற்றுமதி நிறுவனத்தையும் நடத்தி வருகிறார். தன்னுடைய ஆயத்த ஆடை நிறுவனத்தில் ஆண்கள், பெண்கள் என்று 4000 பேருக்கு வேலை கொடுத்து வருகிறார்.

கொங்கு நண்பர்கள் சங்கம் தான் அடையாளம் கொடுத்தது. இன்று பெற்றிருக்கிற அரசியல் அங்கீகாரத்திற்கு கொங்கு நண்பர்கள் சங்கம் தான் அடித்தளம். ஈஸ்வரன் என்று சொன்னால் கொங்கு ஈஸ்வரன் தானே என்று கேட்கும் அளவுக்கு ஈஸ்வரனோடு சேர்ந்து கொங்கும் உலகம் முழுவதும் சென்று சேர்ந்திருக்கிறது. கொங்கு நண்பர்கள் சங்கத்தில் உறுப்பி னராகி செயற்குழு உறுப்பினராக 2 ஆண்டுகள், சங்க செயலாளராக 4 ஆண்டுகள், துணைத் தலை வராக 6 ஆண்டுகள் என்று சங்க வளர்ச்சிக்காக தொடர்ந்து பணியாற்றி னார். ஒருமுறை தலைவராகக் கூடிய வாய்ப்பை முன்னாள் தலைவர் திரு KRP மோகன் அவர்களுக்கும், மற்றொரு முறை தலைவராகக் கூடிய வாய்ப்பைBRT சென்னியப்பன் அவர்களுக்கும் விட்டுக் கொடுத்தார்.கொங்கு நண்பர்கள்








சங்கத்தின் உறுப்பினர்களை அதிகப்படுத்தி, குடும்ப விழாக்களை பிரம்மாண்டமாக நடத்தியதில் பெரும்பங்கு வகித்திருக்கிறார். கொங்கு மண்டலத்திலிருந்து தொழிலுக்கா கவும், படிப்பிற்காகவும், பணிகளுக்காகவும் சென்னையை நோக்கி வந்தவர்களுக்கு கொங்கு நண்பர்கள் சங்கம் சார்பாக வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்துத்துள்ளார். இன்று வரை சங்கத்திற்கு ஒரு ஆக்கபூர்வமான வழிகாட்டியாக இருக்கிறார். 2000 ஆம் ஆண்டு கொங்கு மண்டலம் சார்ந்த தொழிலதிபர்களையும், IAS, IPS, IRS அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அதிகாரி களையும் ஒன்றிணைத்து தொழில்களை விரிவு படுத்தவும், தொழிலதிபர் களுக்கும் அரசு அதிகாரி களுக்குமான தொடர்பை மேம்படுத்தவும் நண்பர் களோடு இணைந்து ASSOCIATION OF ENTERPRISING ELITES அமைப்பை உரு வாக்கி தற்போது வரை அதே நோக்கத்தின் அடிப்படையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

2009 ஆம் ஆண்டி லிருந்து தமிழக அரசியலில் களம் இறங்கி கொங்கு சமுதாயத்திற்கான தனிப்பட்ட அரசியல் அங்கீகாரத்தை பெறபல ஏற்றத்தாழ்வுகளை சந்தித்தும், பல விமர்சனங்களை தாண்டியும் விடாமல் பணியாற்றினார். கட்சி வளர்ச்சிக்காகவும் கொங்கு சமுதாயத்தை ஒற்றுமைப்படுத்து வதற்காகவும் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டுகளுக்குள்ளாக 4000 கிராமங் களுக்கு பயணித்து மக்களை சந்தித்திருக்கிறார்.

2019 நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினரையும், 2021 திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினரையும், 2024 மீண்டும் நாமக்கல் பாரா ளுமன்ற உறுப்பினரையும் உருவாக்கினார்.

டெல்லி நாடாளுமன்றத்திலும், சென்னை சட்ட மன்றத்திலும் முதல்முறையாக தீரன் சின்னமலை புகழ் முழக்கம், நதிகளை இணைத்த காலிங்கராயன் புகழின் முழக்கம் ஓங்கி ஒலித்தது.

அத்திக்கடவு அவினாசி திட்டம், திருமணிமுத்தாறு திட்டம், பாண்டியாறு புன்னம்புழா திட்டம், ஆனை மலையாறு நல்லாறு திட்டம், மயில்களால் விவசாயிகள் பாதிக்கப்படுவதால் மயில்களை கட்டுப்படுத்த வேண்டி போராட்டம், நதிநீர் இணைப்பு போராட்டம் போன்ற பல்வேறு போராட்டங்கள், நடை பயணங்கள், உண்ணாவிரத போராட்டங்கள், கையெழுத்து இயக்கங்கள், பைக் பேரணிகள் போன்றவை கொங்கு மண்டல மக்களின் வளர்ச்சிக்காகவும், பாதுகாப்பிற்காகவும் நடத்தினார்.

2021 ஆம் ஆண்டு திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் முறையாக சட்டமன்ற பேரவைக்கு சென்றார். அரசியல் அங்கீகாரம் வாங்கி சட்டமன்ற உறுப்பினராக சட்டமன்றத்தில் தன்தொகுதியான திருச்செங்கோட்டிற்காக மட்டுமில்லாமல் மொத்த கொங்கு மண்டலத்திற்கும் பல்வேறு கோரிக்கைகளை எழுப்பி நிறைவேற்றியிருக்கிறார். சாதாரணமாக ஒரு சட்டமன்ற உறுப்பினர் 5 ஆண்டுகளில் 15



முறை சராசரியாக பேசியிருக்கிறார்கள். ஆனால் ஈஸ்வரன் சட்டமன்ற உறுப்பினராக சட்டமன்றத்தில் 165 முறை பேசியிருக்கி றார். கோவை செழியன் அவர்களுக்கு பிறகு தமிழக சட்ட மன்றத்தில் கொங்கு வேளாளக் கவுண்டர் களுக்கு 10% உள் ஒதுக்கீடு கொடுக்க வேண்டும் என்று பேசியது குறிப்பிடத்தக்கது.

நேர்மையான சட்டமன்ற உறுப்பினராக லஞ்ச லாவண்யமில்லாமல் 5 ஆண்டுகள் திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதியில் பணியாற்றி தொகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றிருக்கிறார்.

கொங்கு சமுதாய இயக்க சட்டமன்ற உறுப்பினராக நாம் பிறந்த நம் சமுதா யத்திற்கு பெருமை சேர்த்திருக்கிறார். திருச்செங்கோடு தொகுதிக்கு என்ன வெல்லாம் தேவையோ, அவ்வளவுவையும் செய்திருக்கிறார். 50 ஆண்டு கால கோரிக்கை அனைத்தையும் நிறைவேற்றி மக்கள் பாராட்டுகளை பெற்றிருக்கிறார்.

பல்லாயிரக்கணக்கான உறவுகளோடு வருடம் வருடம் ஆடி 18 அன்று சங்கிரி முதல் ஓடாநிலை வரை ஊர்வலம் சென்று தீரன் சின்னமலைக்கு மரியாதை செய்வதை வழக்கமாக வைத்திருக்கிறார். அதேபோல ஒவ்வொரு வருடமும் காளிங்கராயன் சிலைக்கு ஈரோடு மாவட்டம் வெள்ளோட்டிலும், காளிங்கராயன் அணைக்கட்டிலும் மரியாதை செய்து வருகிறார். அதேபோலவே மரியாதைக்குரிய கோவை செழியன் மற்றும் அரூர் முத்து கவுண்டர் அவர்களுக்கும் இயக்கத்தின் சார்பாக தொடர்ந்து புகழஞ்சலி செலுத்தி வருகிறார்.

கொங்கு மண்டலத்தின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்காக செய்த பணிகளில் ஒரு சிலவற்றை இங்கே உங்கள் பார்வைக்காக வைத்திருக்கிறோம்.

1. கொங்கு வேளாளக் கவுண்டர் களுக்கு 10 சதவீதம் உள் இட ஒதுக்கீடு வேண்டி சட்டமன்றத்தில் பேசி இருகிறார்.

2. கொங்கு மண்டலத்தின் பாரம்பரியமான வள்ளி கும்மி கலை நிகழ்ச்சியை 16000 பெண்கள் கொண்டு நடத்தி கின்னஸ் சாதனை விருது பெற்று கொடுத்து அழிவு விளிம்பு நிலையில் இருந்த வள்ளி கும்மியை கொங்கு நாடு கலைக்குழு மூலமாக மீட்டெடுத்து கலையை வளர்த்து வருகிறார்.

3.வாய்க்கால்களிலும், வயல்களிலும் உடைத்து வீசப்படுகின்ற மது பாட்டில்களால் பாதிக்கப்படுகின்ற விவசாயிகளையும், கால்நடைகளையும் பாதுகாக்க டாஸ்மாக் கடைகளில் மது பாட்டில்களை திரும்ப பெறும் திட்டத்தை செயல்படுத்த சட்டமன்றத்தில் வலியுறுத்தி அனைத்து மாவட்டங்களில் நடைமுறை படுத்தப்பட்டுள்ளது.

4. கூட்டுறவு சங்கங்களில் 25 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருந்த பண்ணை சாரா கடனிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்து தீர்வு கண்டது.

5.கவுந்தப்பாடி நாட்டு சக்கரைக்கு சட்ட மன்றத்தில் பேசி புவிச்சார் குறியீடு.

6.விவசாயிகளின் விலை நிலங்களில் பயிர்களை சேதப்படுத்தும் காட்டுப் பன்றிகளை சுடுவதற்கு அனுமதி கேட்டு சட்ட மன்றத்தில் கோரிக்கை வைத்து நிறை வேற்றியது.

7. சேலம் – உளுந்தூர்பேட்டை தேசிய நெடுஞ்



சாலையை முழுமையாக நான்கு வழிச்சாலையாக மாற்ற நடைபயணம் மேற்கொண்ட தோடு சட்டமன்றத்தில் பேசி நிறைவேற்றியது.

8.கோவை மாவட்டத்தில் நீலாம்பூர் – மதுக்கரை இருவழிச் சாலையை ஆறு வழிச்சாலையாக விரிவாக்கம் செய்ய சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்துகட்சி சார்பாக நடை பயணத்தை மேற்கொண்டுபணிகளை துவங்க வைத்தது.

9.ஈரோட்டில் காவிரி ஆற்றில் கலக்கும் கழிவுகளை சுத்தப்படுத்த சட்டமன்றத்தில் வலியுறுத்தி யதன் விளைவாக தமிழ்நாடு அரசு 30 கோடி ரூபாயில் நிதி பெற்றது.

10. சட்டமன்றத்தில் பேசி கோவைக்கு 300 கோடி மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த நூலகம் அமைத்தல்.

11. அவிநாசி அத்திக்கடவு திட்டத்தை நிறை வேற்ற 186 கிலோமீட்டர் நடைபயணம் மற்றும் பலக்கட்ட போராட்டங்களை நடத்தி அரசோடும், அதிகாரிகளோடும் தொடர்ந்து தொடர்பிலிருந்து திட்டத்தை விரைவாக துவக்க காரணமாக இருந்திருக்கிறார்.

12. நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்த LBP வாய்க்கால் பிரச்சனைக்கு தீர்வு காண முயற்சித்து வெற்றி கண்டிருக்கிறார்.

13. கொங்கு மண்டல விவசாயிகளின் நீண்ட கால பிரச்சனையாக இருந்த எரிவாயு குழாய் திட்டத்தை நெடுஞ்சாலைகள் வழியாக எடுத்துச் செல்வதற்காக அரசிடம் வலியுறுத்தி புதிய பாதையை திட்டமிட்டு செயல்படுத்த உறுதுணையாக இருந்திருக்கிறார்.

14. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட திருமணிமுத்தாறு திட்டம், பாண்டியாறு புன்னம்புழா திட்டம், ஆனைமலையாறு நல்லாறு திட்டம்மற்றும்கள் இறக்க அனுமதி வேண்டி சட்டமன்றத்தில் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறார்.

15. பெண்களுக்கு திருமண வயதை 18 இலிருந்து 21 ஆக உயர்த்த சட்டமன்றத்தில் கோரிக்கை.

16. பொள்ளாச்சி, கோபிசெட்டிபாளையம், ஆத்தூர், திருச்செங்கோடு பகுதிகளை மாவட்டமாக அறிவிக்க வேண்டி கோரிக்கை.

17. திருப்பூரில் புதிதாக அமையவிருக்கும் பேருந்து நிலையத்திற்கு தீரன் சின்னமலை பெயர் வைக்க கோரிக்கை வைத்து சாதித்தது.

18. கோவை மெட்ரோ ரயில் திட்டத்தில் பொள்ளாச்சி திருப்பூர் அவிநாசி அன்னூர் புறநகர்



பகுதிகளை இணைக்க வேண்டி சட்டமன்றத்தில் கோரிக்கை.

19. கோவையில் உயர் நீதிமன்ற கிளை அமைக்க கோரிக்கை.

20. கரூருக்கும். நாமக்கல்லுக்கும் இடையே விமான நிலையம் அமைக்க கோரிக்கை.

21. தெருநாய்கள்கடித்து இறந்த ஆடு, மாடு மற்றும் கோழிகளுக்கு இழப்பீடு தமிழ்நாடு முழுவதும் உள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பெற்று கொடுத்துள்ளார்.

திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினராக திருச்செங்கோட்டில் நிறைவேற்றிய சில திட்டங்கள்.

1. அர்த்தநாரீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகொண்டு வந்தார்.

2.அம்மன் குளத்தினை சுத்தம் செய்து 30 லட்சம் மதிப்பீட்டில்நடைபாதை வசதி செய்து கொடுத்துள்ளார்.

3.திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்டி நவீனமயமாக்கியது.

4. பல பேருந்து வசதிகள், திருச்செங்கோடு கோவை, திருச்செங்கோடு பழனி நேரடி பேருந்து வசதி ஏற்படுத்தி கொடுத்துள்ளார்.

5.திருச்செங்கோட்டிற்கு புறவழிச்சாலை அமைத்து திருச்செங்கோடு நோக்கி வருகிற சாலை களை நான்கு வழிச்சாலையாக மாற்றி யுள்ளார்.

6.அனைத்து பகுதிகளுக்கும் காவிரி குடிநீர் திட்டத்தை நிறைவேற்றியுள்ளார்

7.திருச்செங்கோடு தினசரி சந்தை, வார சந்தைநவீனப்படுத்தி கொடுத்துள்ளார்.

8.IAS, IPS மற்றும் வங்கி தேர்வுகளுக்கு மாணவ மாணவிகள் படிக்க அறிவிச்சார் மையம்

ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

9. Bio Miningமூலம் நகரப்பகுதியின் குப்பைகளை அகற்றியது.

10. 450 ஆண்டு கால பழமையானதேர்களை மாற்றி புதிய தேர்களை உருவாக்கியது. தேரோடும் வீதிகளில் புதைவட கம்பிகள், தங்கும் விடுதி, ரோப் கார் வசதி ஆகியவற்றை ஏற்படுத்தியது.

11. மல்லசமுத்திரம் ஒன்றியம், வையப்பமலையில் பாலமுருகன் மலைக்கோவிலுக்கு மலைப்பாதை அமைத்தது.

12. தீயணைப்பு படையினருக்கு குடியிருப்பு வசதி.

13. பழையபேருந்து நிலையத்தை நவீனமயமாக்கியது.

14. மொளசி ஊராட்சி காவிரி ஆற்றங்கரையில் ஓரத்தில் மின்சார தகனமேடைஅமைத்து கொடுத்துள்ளார்.

15. தொழிற்பயிற்சி கல்லூரி (ITI) அமைத்து கொடுத்துள்ளார்.

16. திருச்செங்கோடு நகராட்சி தேர்வுநிலை நகராட்சியில் இருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

17. கண்ணகி கோட்டம் அமைக்க சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்து அனுமதி பெற்றுள்ளார்.

18. திருச்செங்கோடு அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு சிறு விளையாட்டு அரங்கம் அமைத்து கொடுத்துள்ளார்.

19. பல பிரச்சினைகளால் மூடப்பட்ட பல கோவில்களை பேச்சுவார்த்தைகள் மூலமாக வழிபாட்டுக்குத் திறந்தது.




20. புதிய கால்நடை மருத்துவமனை, கால்நடை ஆய்வக கட்டிடம், ஆவின் பாலகம், ஆவின் அலுவலகம் ஒன்றியத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தது.

21. திருச்செங்கோடு நகராட்சி பகுதியில் 37 கோடி ரூபாய் செலவில் கழிவு நீர் வாய்க்கால் அமைத்து சுத்திகரிப்பு நிலையம் அமைத்து கொடுத்துள்ளார்.

22. கொக்கராயன்பேட்டையில் காவல் நிலையம் சட்டமன்றத்தில் பேசி அமைத்துக் கொடுத்துள்ளார்.

23. பள்ளிபாளையத்திற்கு புதியகாவல் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைத்துக் கொடுத்துள்ளார்.



P. விவேகானந்தன்
97881 44400



விதைத்தவன் உறங்கலாம்...
விதைகள் உறங்காது...

நம்மால் முடியும்

V GARMENTS

MKB Complex, 241/1, Marapettai Street, Udumalai Road, Pollachi -1.

LINEN CLUB
PASSIONATE LIKE YOU

OTTO®

INDIAN PRINCESS

JDC

# சி.முத்துசாமி சிலை திறப்பு




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, தலைமைச் செயலகத்தி லிருந்து செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில், இன்று (13.02.2026) கரூர் மாவட்டம், எல்லைகாட்டு ராமச்சந்திரபுரம் கிராமத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் காவிரி மீட்புக் குழு குழுவில் இணைந்து போராடியவரும் விவசாயிகளின் நலன்களுக்காகப் பாடுபட்டவருமான திரு. சி.முத்துசாமி அவர்களின் திருவுருவச் சிலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.விமல்ராஜ் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர். இளங்கோ மற்றும் திரு.சி.முத்துசாமி அவர்களின் மகன். ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதி அரசர் திரு.எம்.ஜெயச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்

## திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மோளியப்பள்ளி

**அருள்மிகு ஸ்ரீ மஹா கணபதி**

**அருள்மிகு ஸ்ரீபெரியகாண்டிஅம்மன்**

**அருள்மிகு ஸ்ரீஅண்ணமார் சுவாமி**

ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா

(08-03-2026) ஞாயிற்றுக்கிழமை

காலை 10.45 மணிக்கு மேல் 11.45 மணிக்குள் நடைபெறுகிறது.

**பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு**

**இறை அருள் பெறுக!!**



# குடியரசு தின விழா




77வது குடியரசு தினத்தை முன்னிட்டு நமது சங்கத்தில் வெள்ளி விழா இல்லத்தில் செயலாளர் எம் அமராவதி, செயற்குழு உறுப்பினர் கந்த கார்த்திக், கே ஜெகதீசன், உறுப்பினர் பார்த்திபன் அவர்களுடன் விடுதியில் தங்கி இருக்கும் மாணவர்களுடன் கொடி ஏற்றப்பட்டது.






# தடகளத்தில் தங்கம் அள்ளும் மருத்துவர்

## டாக்டர் எஸ்.விஜயா–தமிழ்நாட்டிற்குப் பெருமை!

ஒரு கையில் அறுவை கருவிகள், மற்றொரு சிகிச்சை கையில் தடகளப் பதக்கங்கள் என மருத்துவத் துறையிலும் விளையாட்டுத் துறையிலும் ஒரே நேரத்தில் தடம் பதித்து வருகிறார் டாக்டர் எஸ். விஜயா. 25 ஆண்டுகளாகப் பல் மருத்துவராகப் பணியாற்றி வரும் இவர், தற்போது சர்வதேச மாஸ்டர்ஸ் தடகளப் போட்டிகளில் இந்தியாவுக்காகத்தொடர்ந்து பதக்கங்களைக் குவித்து, பலருக்கும் ஊக்கமளிக்கும் முன்னுதாரணமாகத் திகழ்கிறார்.

அபுதாபியில் அதிரடி:

5 பதக்கங்களை வென்று சாதனை

தற்போது பிப்ரவரி 6 முதல் 14 வரை ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் உள்ள சாயித் விளையாட்டு நகரத்தில் அபுதாபி ஓபன் மாஸ்டர்ஸ் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்ற டாக்டர் விஜயா, மின்னல் வேகத்தில் ஓடி 3 தங்கம் மற்றும் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்று தேசத்திற்குப் பெருமைசேர்த்துள்ளார். சர்வதேச அரங்கில் தேசியக் கொடி ஏந்தும் தருணங்கள் ஒவ்வொன்றும் தனது கடின உழைப்பிற்கு கிடைத்த வெற்றி என அவர் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார்.

சாதனைகளின் பட்டியல்:

அல்பேனியா முதல் மங்களூரு வரை:

டாக்டர் விஜயாவின் தடகளப் பயணம் குறுகிய காலத்திலேயே இமாலய வெற்றிகளை எட்டியுள்ளது:

ஸ்பீட் மாஸ்டர்ஸ் சவால் (அல்பேனியா):

ஐரோப்பா மாஸ்டர்ஸ் அத்லெடிக்ஸ் நடத்திய போட்டியில் தங்கம், வெள்ளி, வெண்கலம் மூன்று பதக்கங்களையும் வென்ற முதல் இந்திய மாஸ்டர்ஸ் வீராங்கனை என்ற வரலாற்றைப் படைக்கிறார்.

தென்னாசிய சாம்பியன்ஷிப்:

மங்களூருவில் நடைபெற்ற போட்டியில் 60

மீட்டர் ஓட்டத்தில் தங்கம் வென்று அசத்தினார்.




ஆசியா பசிபிக் மாஸ்டர்ஸ் (தென்கொரியா): 100 மீ, 200 மீ மற்றும் 400 மீ ஓட்டப் பந்தயங்களில் மூன்று வெள்ளிப் பதக்கங்களை வென்று தனது பன்முகத் திறமையை நிரூபிக்கிறார்.

**மருத்துவர்கள் ஒலிம்பிக் (புனே):**

இந்திய அளவில் மருத்துவர்களுக்காக நடத்தப்பட்ட ஒலிம்பிக் போட்டியில் 6 தங்கப் பதக்கங்களை வென்று அனைவரின் கவனத்தையும் ஈர்க்கிறார்.

**மருத்துவமும் தடகளமும் துல்லியமான : பயணம்:**

பி.டி.எஸ்., எம்.எஸ் உள்ளிட்ட உயர்கல்வித் தகுதிகளைக் கொண்ட இவர், ஒரு வெற்றிகரமான பல் மருத்துவராக மட்டுமன்றி, உணவியல் நிபுணர் மற்றும் முக யோகா பயிற்சியாளராகவும் செயல்படுகிறார். "அதிகாலை ஓட்டப்பயிற்சி எனது மனதை தெளிவாக்குகிறது. அறுவை கருவியும், ஓட்டப்பந்தயத் தொடக்க சிகிச்சை கோடும் எனக்கு ஒரே மாதிரியான துல்லியத்தைக் கற்றுத் தருகின்றன," என அவர் கூறுகிறார்.

சமூகப் பல் சுகாதார சேவைகளுக்காக சிறந்த சமூக பல் சுகாதார ஒருங்கிணைப்பாளர்' மற்றும் 'அபயா ஸ்மைல் வாரியர்' ஆகிய தேசிய விருதுகளையும் இவர் பெற்றுள்ளார்.

**பெண்களுக்கான உந்துதல் :**

2022-ஆம் ஆண்டு முதல் தனது தீவிர உடற்பயிற்சி பயணத்தைத் தொடங்கிய டாக்டர் விஜயா, "வலிமையான பெண்கள் ஊக்கத்திற்காகக் காத்திருக்க மாட்டார்கள்; அவர்களே ஊக்கத்தை உருவாக்குவார்கள்" என்ற கருத்தை முன் வைக்கிறார். மருந்தில்லா உடல்நலம் மற்றும் நீண்ட நாள் ஆரோக்கியத்தை நோக்கிப் பெண்களை வழிநடத்துவதையே தனது வாழ்நாள் இலக்காகக் கொண்டுள்ளார்.

ஒழுக்கம் மற்றும் விடாமுயற்சி இருந்தால் எந்த வயதிலும் சாதிக்கலாம் என்பதை நிரூபித்து வரும் டாக்டர் எஸ். விஜயாவின் இந்தப் பயணம், தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் சர்வதேச அளவில் தொடர்ந்து பெருமையைத் தேடித் தருகிறது.

## வாழ்த்துகிறோம்!



வெள்ளகோயில் அருகில் உள்ள சத்திபாளையம், திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த **வி.நல்லசிவன்** (குலம் / கூட்டம்: தனஞ்செயன்) பதிவுதுறையில் கூடுதல் பதிவாளராக திறம்பட செயலாற்றி இந்திய ஆட்சிப் பணியாளராக (இ.ஆ.ப) பதவி உயர்வு பெற்றமைக்கு சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறது.

# ஈரோடு பஞ்சலிங்கபுரத்தில் பஞ்சலிங்கம் உழவர் மன்றம் நடத்திய காலிங்கராயன் தின விழா காட்சிகள்!







பன்னிரண்டாம் ஆண்டாக காலிங்கராயன் தின விழா தை மாதம் ஐந்தாம் தேதி பஞ்சலிங்கம் உழவர் மன்றம் மற்றும் பஞ்சலிங்கம் அறக்கட்டளை சார்பாக பஞ்சலிங்கபுரத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது. இதில் பெண்கள் முளைப்பாரி எடுத்து வந்து காலிங்கராயனுக்கு நன்றி செலுத்தி உணர்வோடும் உள்ளன்போடும் காலிங்கராயனை வணங்கி வருகிறார்கள். இதில் காலிங்கராயனின் வாரிசுகளான ராஜா அருண் காலிங்கராயன் மற்றும் ராஜா சித்தார்த் காலிங்கராயன் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சென்னையில் இருந்து திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டுள்ளார்கள். பாரதிய ஜனதா மாவட்ட தலைவர் திரு.செந்தில் மற்றும் பல கட்சி பிரமுகர்கள், உள்ளூர் மக்கள் பெண்கள், குழந்தைகள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.




# காலிங்கராயன்
# நதி நீர் இணைப்பின் முதல்வன்

**க.பானுசந்தர் B.E.,M.B.A.,**

**க**ண்ணை மூடி கற்பனை செய்து பாருங்கள். இரயிலில் ஜன்னல் ஓரம் பயணம் செய்கிறீர்கள். இரயில் ஓடத் தொடங்குகிறது. இரயில் ஓடத் தொடங்கிய ஐந்தாவது நிமிடத்தில் இருந்து தண்டவாளத்தின் இரு மருங்கிலும் நெல் வயல்களாக, மஞ்சள் விளையும் நிலங்களாக, வாழை மரங்களாக, கரும்பு விளையும் நிலங்களாக பச்சை பசேல் என்று காட்சி அளிக்கிறது.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பச்சையும், பசுமையும் தவிர எதுவும் புலப்படவில்லை. தண்டவாளத்தின் ஒரு பக்கம் ஒரு நதியும், இன்னொரு பக்கம் மற்றொரு நதியும் பாய்கிறது. இடையில் உள்ள நிலப் பகுதிகளும் நாற்று நட்ட நெல் வயல் முதல் அறுவடைக்கு காத்திருக்கும் நெல் வயல் என மொத்தமும் நெல் வயல்களாகவே காட்சி அளிக்கிறது.

அறுவடைக்கு காத்திருக்கும் நெற்கதிர்களை உண்ண கிளிகளும், குருவிகளும், கொக்குகளும். மயில்களுமாக ஏதோ கானகம் போல காட்சி அளிக்கிறது. அத்தனை வயல்களிலும் விவசாயத் தொழிலாளர்களின் தலைகளாக மட்டுமே தெரிகிறது. பாதங்கள் வெளியே தெரியவில்லை. அரை முட்டி அளவிற்கு நீர் நெல் வயல்களில் தேங்கி இருப்பதால் அவர்களின் பாதங்கள் மட்டும் காணக் கிடைக்கவில்லை.

ஒட்டு மொத்தமாக நீருக்குள் மூழ்கி இருக்கும் பிரதேசம் போல அந்த தேசம் காணப்படுகிறது. ஒன்றல்ல. இரண்டல்ல மொத்தம் 89 மைல்கள் இப்படியே இடைவெளி இன்றி இப்படியே காட்சி அளிக்கிறது. எப்படி இருக்கிறது உங்கள் மன ஓட்டம்? உங்களையும் அறியாமல் அந்த தேசத்தை நிஜத்தில் காண வேண்டும் என்று ஆர்வம் பிறக்கிறது அல்லவா?

மேலே சொன்ன வார்த்தைகள் யாவும் என்னுடைய கற்பனை அல்ல. முல்லைப் பெரியாறு அணை கட்டுவதற்கான ஆய்வுப் பணிகளை பார்வையிடுவதற்காக பம்பாயில் இருந்து ஈரோடு வழியாக அம்மையநாயக்கனூருக்கு இரயிலில் செல்லும் வழியில் ஆங்கிலேயப் பொறியாளர் Colonel R.Home அவர்கள் 1889-ம் ஆண்டு கண்டு தனது பயணக் குறிப்பில் பதிவு செய்தது தான் நான் மேல் சொன்ன காட்சி.

அத்தகைய சிறப்பு வாய்ந்த பகுதிகள் ஈரோடு மாவட்டம், பவானி அருகில் உள்ள காலிங்கராயன் பாளையத்தில் தொடங்கி கரூருக்கு அருகில் உள்ள பஞ்சமாதேவி வரை இருந்த நிலங்கள். வறண்ட, வானம் பார்த்த புஞ்சை நிலங்களாக இருந்த இவற்றை முப்போகம் நெல் விளையும் நஞ்சை நிலங்களாக மாற்றிய அந்த ஒற்றை மனிதன் "காலிங்கராயன்".

வரலாற்றில் எத்தனையோ அரசர்கள் இருந்திருக்கிறார்கள். சிலர் மட்டுமே கல்லணை கட்டிய கரிகால சோழனாகவும், தஞ்சை பெரிய கோவிலை கட்டிய ராஜராஜ சோழனாகவும், கடாரம் கொண்ட ராஜேந்திர சோழனாகவும் பெயர் பெற்று இன்றும் நிலைத்து நிற்கிறார்கள். ஆனால் தனது செயல்களால் புகழ் பெற்று "பேரரசனாக" வாழ்ந்த ஒரு குறுநில அதிகாரி தான் காலிங்கராயன் (எ) லிங்கய்யன். அவரைப்

பற்றிய புத்தகம் தான் இது.

இந்தப் புத்தகம் எழுதுவதற்காக ஆவணங்களை தேடி அலைந்த போது மக்களிடம் வெறும் செவிவழிச் செய்திகள் மட்டுமே கொட்டிக் கிடந்தன. ஆனால் அவர்களிடம் ஆவணங்கள் ஏதும் இல்லை. காலிங்கராயனின் உண்மையான வீரமும், அறிவுக் கூர்மையும் குறைத்தே மக்களிடம் காட்டப்பட்டு வருகிறது. வேறு எந்த அரசனின் வரலாற்றை நான் எழுதி இருந்தால், வெறும் 1 அல்லது 2 ஆண்டுகளில் எனது தேடல் முழுமையாக முடிந்திருக்கும். மேற்கோள்களுக்கு பல புத்தகங்கள் கிடைத்திருக்கும்.

காலிங்கராயனைப் பற்றி நான் தெரிந்து கொள்ள எடுத்துக் கொண்ட காலம் 10 ஆண்டுகள். காரணம் பல கதைகள் மட்டுமே உலவின. இதை பகுப்பாய்வு செய்யவே பல வருடங்கள் தேவைப்பட்டது. காலிங்கராயன் கட்டிய கோவில்கள்,வழங்கிய கொடைகள் பற்றி அறிய நான் எனது கவனத்தை சிதறவிடவில்லை. காலிங்கராயன் ஒரு மிகச் சிறந்த பொறியாளர் என காட்டுவதே எனது நோக்கமாக இருந்தது.

2016 முதல் எனது தேடல் தொடங்கியது. நேரடி ஆய்வு செய்ய எனது உதவிப் பேராசிரியர் பணியில் இருந்து தற்காலிக ஓய்வு எடுக்க வேண்டி வந்தது. வருமான இழப்பு ஏற்பட்டது. இதனால் வருமானம் வேண்டி எனது தோட்டத்தில் விவசாயம், பால் கறவை செய்து, அதில் வரும் வருமானத்தை மட்டுமே கொண்டு ஆய்வுகளை மேற்கொண்டேன்.

கள ஆய்வுக்கு சென்ற போது பாம்புகளும், விஷப்பூச்சிகளும் நிறைந்த ஈரோட்டின் மொத்த கழிவுகளும் பாயும் பெரும்பள்ளம் மற்றும் குரங்கன்பள்ளம் ஓடைகள் என்ற பெயரில் உள்ள 3 அடி ஆழமுள்ள பெரிய புதைகுழி சாக்கடைக்குள் உயிரை பணயம் வைத்து இறங்கி காலிங்கராயன் வாய்க்காலில் உள்ள நீர் கடத்தும் பாலங்களை ஆய்வு செய்ய வேண்டி வந்தது. வேறு எவரும் துணைக்கு வர பயந்த போதும். நான் ஒருவனாகவே இதை எல்லாம் செய்ய வேண்டி இருந்தது.

பல நாட்கள் ஆவண அறைகளில் எனது தேடல் தொடர்ந்தது. தினமும் குறைந்தபட்சம் 5 லிட்டர் வியர்வை என் உடலில் இருந்து வெளியேறி இருக்கும். சில நாட்கள் பரணில் உள்ள பழைய மர சாமான்களுக்கு மத்தியில் ஏதாவது ஆவணம் கிடைக்குமா என தேடப் போய் நான் கீழே விழுந்து, இரும்பு, மரப் பொருட்கள் என் மேல் விழுந்து தலையில் ரத்தம் வழிந்தது எல்லாம் தனிக் கதை.

தினமும் ஆவண அறைகளில் தேடி முடித்து விட்டு வெளியே வரும் போது எனது உடல் முழுமையும் குப்பையில் குளித்தது போல் இருக்கும். இதனால் வீடு திரும்பும் போது பேருந்துகளில் சக பயணிகள் என் அருகே அமர முகம் சுளிப்பர். இத்தனை கஷ்டப்பட்டும் என்னால் கண்டுபிடிக்க முடிந்தது காலிங்கராயன் வாய்க்கால் சம்பந்தப்பட்ட பழமையான ஆவணங்கள் பெரும்பாலும் அழிந்து விட்டன என்பதைத் தான்.

இந்த புத்தக ஆய்விற்கு உதவி புரிந்தவர்களுக்கு "நன்றி!" என்ற வார்த்தையைத் தவிர என்னால் வேறு எதை உறித்தாக்க முடியும். அவர்களுக்குத் தான் இந்த புத்தகம் சமர்ப்பனம். எத்தனையோ தனிப்பட்ட வாழ்வியல் இடர்பாடுகளை பொறுத்துக் கொண்டும், இன்பங்களை தவிர்த்தும், வருமான இழப்பை தாங்கிக் கொண்டும் இந்தப் புத்தகத்தை நான் எழுதக் காரணம் அந்த ஒற்றை வார்த்தை "காலிங்கராயன்".

உலகப் பெரும் பொறியாளராக மேம்பட்ட அணைப் பொறியியல், வாய்க்கால் வெட்டுதல், ஒற்றைக் கரை வாய்க்கால் அமைத்தல், குளங்கள் இணைப்பு. நதிநீர் இணைப்பு, மேல் நீர்வழிப்பாலம், கீழ் நீர்வழிப்பாலம், நீர் சுரங்கப் பாதைகள் என உலகிற்கு புதிய உத்திகளை புகுத்தி அனைத்தையும் ஒரு சேர செய்து இன்றைய பொறியாளர்களுக்கு' பாடம் எடுத்துச் சென்ற படிக்காத விஞ்ஞானியாக மதிக்கப்பட வேண்டிய காலிங்கராயன் அவர்கள். இன்று வெறும் கடவுளாக மட்டுமே மக்களால் கொண்டாடப்படுகிறார்.

அவர் உருவாக்கிய அணை மற்றும் வாய்க்காலைப் பற்றிய உண்மையை தெரிந்து கொள்ளாமல், அதை காக்க அக்கறை கொள்ளாமல் மக்கள் இருப்பது தாங்க முடியாமல் தான் வெளி வருகிறது இந்தப் புத்தகம்.

இந்த புத்தகத்தில் உண்மைகளை மட்டுமே எழுதி

உள்ளேன். எந்தெந்த விடயங்களுக்கு ஆதாரம் கிடைத்ததோ, அதை மட்டுமே எழுதி உள்ளேன். மற்றவற்றை எல்லாம் புறந்தள்ளி உள்ளேன். இன்னும் ஆதாரங்கள் கிடைக்கும் பட்சத்தில் அதை அடுத்த பதிப்பில் வெளியிடுகிறேன். இன்னும் சில ஆவணங்கள் இருக்குமிடம் [தில்லி, கொல்கத்தா, லண்டன்] தெரிந்தும், என்னால் அதை தேடிப் போய் ஆய்வு செய்ய எனது இன்றைய பொருளாதாரம் இடம் கொடுக்கவில்லை.


எவரிடமும் உதவி பெறாமல் என்னுடைய கையிருப்பில் இருந்த கடைசி ரூபாய் வரை செலவழித்து இந்த ஆய்வுகளை இதுவரை தனி ஒருவனாக முடித்து விட்டேன். வாய்ப்பு இருந்தால் எதிர்காலத்தில் அந்த ஆவணங்களில் உள்ள விடயங்களையும் அடுத்த பதிப்பில் வெளிக்கொண்டு வர முயற்சிக்கிறேன். உலகெங்கிலும் உள்ள மக்கள் தங்களிடம் காலிங்கராயன் சார்ந்த ஆதாரப்பூர்வத் தகவல்கள் ஏதேனும் இருந்து. அதைத் தர முன் வந்தால் அதையும் அடுத்த பதிப்பில் வெளியிட தயாராக உள்ளேன்.

இந்த புத்தகத்தில் காலிங்கராயன், அவர் கட்டிய அணைக்கட்டு மற்றும் வாய்க்கால் ஆகியவற்றைப் பற்றி எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் தேவையான தகவல்களை மட்டுமே வழங்கியுள்ளேன். இன்னும் விரிவான தகவல்கள் என்னிடம் நிறைய உள்ளன. இதைப் பற்றிய 786 ஆண்டு கால தொழில்நுட்பம் மற்றும் முழுமையான விபரங்களை பெற தமிழ்நாடு அரசு விரும்பினால். இன்னும் விரிவான ஆய்வு நடத்தி முழுமையான ஆய்வு அறிக்கையை அரசுக்கு வழங்க தயாராக இருக்கிறேன்.

இந்த புத்தகம் தமிழ்நாடு அரசுக்கும். பொதுமக்களுக்கும் காலிங்கராயன் அவர்களைப் பற்றியும், அவர் கட்டிய அணைக்கட்டு பற்றியும், அவர் வெட்டிய வாய்க்காலைப் பற்றியும் விரிவாக அறிய தகவல் களஞ்சியமாகமாக இருக்கும் என நம்புகிறேன்.

Q : writerbanuchandar1282@gmail.com

நூல் குறிப்பு





| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | காலிங்கராயன் நதிநீர் இணைப்பின் முதல்வன் |
| நூல் பொருள் | : | வரலாறு, புள்ளியியல் |
| ஆசிரியர் | : | க.பானுசந்தர், B.E., M.B.A., |
| நூல் உரிமை | : | ஆசிரியருக்கு |
| முதல் பதிப்பு | : | 2026 |
| நூலின் அளவு | : | 7 x 9.5 inch |
| விலை | : | ரூ.350 |
| மின்னஞ்சல் | : | writerbanuchandar1282@gmail.com |
| தொலைபேசி | : | 79040-18795 (what's app) |
| ISBN Number | : | 51246/ISBN/2025/A (Reference) |
| Publication | : | MALARKODI PUBLICATIONS, ERODE. |






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் (13.2.2026) அன்று நாமக்கல் மாவட்டம், நவணி தோட்டக்கூர்பட்டி கிராமத்தில் 2 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்கு மார்பளவு சிலையுடன் கூடிய அரங்கம், அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூர் கிராமத்தில் 3 கோடி ரூபாய் செலவில் இந்தி திணிப்பினை எதிர்த்துப் போராடி முதன் முதலில் உயிர்த் தியாகம் செய்த கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு அரங்கம், ஈரோடு மாவட்டம், அரச்சலூர் ஓடாநிலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மணிமண்டப வளாகத்தில் 1 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள குதிரையின் மேல் அமர்ந்தபடி உள்ள தீரன் சின்னமலை அவர்களின் வெண்கலச் சிலை, கரூர் மாவட்டம், எல்லைகாட்டு ராமச்சந்திரபுரம் கிராமத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் கரூர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி. முத்துசாமி அவர்களுக்கு திருவுருவச் சிலை ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் கலந்து கொண்டார்.








நாமக்கல் மாவட்டம் புதுச்சத்திரத்தில், சென்னை மாகாண முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயனுக்கு அரசு சார்பில் அமைக்கப்பட்டுள்ள மார்பளவு சிலை மற்றும் நினைவு மண்டபத்தை பிப்ரவரி 16 2026-ல் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். இது சென்னை மாகாண முன்னாள் முதல்வருக்கு மரியாதை செலுத்தும் விதமாக தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கிய நிகழ்வாகும்.

# புதிய திட்ட சாலைக்கு நா.மகாலிங்கம் ஐயா பெயர்






(22.02.2026) அன்று கோவை, பொள்ளாச்சி நகராட்சியில் கோவை சாலை மற்றும் பல்லடம் சாலையை இணைக்கும் புதிய திட்ட சாலைக்கு நா.மகாலிங்கம் ஐயா அவர்களின் பெயர் வைத்து மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு சக்கரபாணி, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு மு.பெ.சாமிநாதன், முன்னாள் அமைச்சரும் கரூர் சட்டமன்ற உறுப்பினருமான திரு செந்தில் பாலாஜி மற்றும் கொ.ம.தே.க. பொதுச்செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்எல்ஏ மற்றும் நமது சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் நித்தியானந்தம் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சங்க உறுப்பினரும், திரைக் கலைஞருமான திரு.பொன்வண்ணன்– திருமதி.சரண்யா இணையரின் மகள் டாக்டர் சாந்தினி டாக்டர் டான் ஆகியோரது திருமண வரவேற்பு விழாவில் சங்கத் தலைவர் தமது இல்லத்தினருடன் கலந்து கொண்டு வாழ்த்திய காட்சி!




அகவை 90 விலும் அயராது தமிழ்ப் பணியாற்றும் கவிஞர் சிற்பியயைப் போற்றும் விதமாக "நான் ஒரு வானம்பாடி" (கவிஞர் சிற்பி நினைவலைகள்) புத்தக வெளியீட்டு விழா கடந்த 31.01. 2026 அன்று கோவை அரசூர் கே.பி.ஆர் கல்வி நிறுவனத்தில் நடைபெற்றது. பாரதியார் பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவர் டாக்டர்.ஏ. சங்கமித்ரா வரவேற்புரையாற்ற கே.பி. ஆர் கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர்.கே.பி. இராமசாமி அவர்கள் முன்னிலை வகித்தார். மாண்பமை நீதியரசர் ஆர்.மகாதேவன் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமையேற்று, நூல் வெளியிட்டு சிறப்புரையாற்ற, திரு.இயாகாகோ சுப்பிரமணியம் அவர்கள் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். திரு விஜயா வேலாயுதம், சாகித்ய அகாதெமி விருத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்க, கவிஞர்.சிற்பி மகிழ்வுரை வழங்கினார். கே.பி.ஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் டாக்டர் பி.கீதா நன்றியுரையாற்றினார்.

# பத்ம பூஷண் விருதாளர்களுக்கு வாழ்த்துக்கள்!

**டாக்டர்.கே.ஆர்.பழனிசாமி - மருத்துவம்:** கள்ளிப்பட்டி ராமசாமி பழனிசாமி, 50 ஆண்டுகளுக்கும் மேலாக மருத்துவ சேவையில் ஈடுபட்டு வருகிறார். இரைப்பை குடல் நோய் பிரிவு சிறப்பு டாக்டராக பணியாற்றி வரும் பழனிசாமி, நவீன மருத்துவ ஆராய்ச்சிகள் மூலம் தன் திறனை நிலை நாட்டி வருகிறார். 2007ல், இவரது சேவையை பாராட்டி, ஏற்கனவே பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது. தற்போது, பத்ம பூஷண் விருது பெற்றுள்ளார்.





**திரு.எஸ்.கே.எம்.மயிலானந்தன் - சமூக சேவை:** ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த எஸ்.கே.எம்., குழும நிறுவனர் மயிலானந்தன், சமூக சேவை பிரிவில், பத்ம பூஷண் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். சமூகத்தில், பொது சுகாதாரம் மற்றும் சமூக நலனை மேம்படுத்த பெரும் பங்களித்த இவர், 3,000க்கும் மேற்பட்ட கிராமங்களில், யோகா, தியானம், இலவச மருத்துவ முகாம் நடத்தியுள்ளதுடன், குழந்தைகள் நலனை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகிறார். கடந்த, 2013ல், இவரது சமூக சேவையை கவுரவிக்கும் வகையில், இவருக்கு பத்ம ஸ்ரீ விருது வழங்கப்பட்டது. தற்போது, பத்ம பூஷண் விருது பெற்றுள்ளார்.

## மணமகன் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | பிறந்த தேதி, நட்சத்திரம் | கல்வி | தொழில் | பிறந்த இடம், நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 207 | E.அனுபிரியா | செம்பூத்தான் | 18.01.1999 திருவோணம் | B.Com.,CA | HSBC Bank | Erode 10.25 PM | 94436 15911 94429 97304 |
| 208 | மதுவர்ஷினி | வெண்டுவன் | 11.09.1995 உத்திரட்டாதி | B.Tech.I.T. | Software Engineer | Trichy 4.30 A.M. | 73583 27708 98431 92040 |
| 209 | Subhamathi T | கூறை | 02.01.2001 உத்திரட்டாதி | B.E.,M.S., | Self Business (Automobile Shop) | Erode 7.48 A.M. | 98842 45656 |
| 210 | P.S.அவந்திகா | செங்கண்ணன் | 08.09.1990 அஸ்வினி | B.Tech (IT) | I.T. Engineer | உடுமலைப்பேட்டை 02.27P.M. | 97514 21673 94420 65767 |
| 211 | R.ரம்யா | விழியன் | 11.02.1993 சித்திரை | BE.,EEE | I.T. Software | ஈரோடு 07.09 A.M. | 99520 92347 98650 92150 |

## மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | பிறந்த தேதி, நட்சத்திரம் | கல்வி | தொழில் | பிறந்த இடம், நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 178 | G.விஷால் | பயிரங் | 09.10.1998 ரோகிணி | B.E.,Mech | Deputhy Manager (Mahindra Limited) | Salem 5.35 P.M. | 97916 61879 98410 26879 |
| 179 | Naveen | காடை | 11.02.1993 அனுஷம் | B.E.(CSE) | Own Business (Sri priya Scientific &co) | Erode 07.21 A.M. | 8608082462 98400 50009 |
| 180 | N.Haresh Kumar | பன்னை | 26.10.1994 புனர்பூசம் | B.E. Civil | Private Company (Chennai) | Namakal 08.03 P.M. | +185 74151160 94443 85473 |


## தங்கள் விளம்பரங்களுக்கு...

நமது சங்கத்தின் இந்த புத்தகத்தில் விளம்பரம் செய்து சங்கத்தின் கரத்தை வலுப்படுத்துவோம்.

இந்த புத்தகம் 4 ஆயிரம் பிரதிகளுடன் பல்வேறு மக்களை பல்வேறு பகுதிகளில் சென்றடைகிறது.

மென் நகலாக 5000 பேருக்கு சென்றடைகிறது.

| | |
|---|---|
| **Full page color** | **10,000** |
| **Front inner** | **15,000** |
| **Back inner** | **15,000** |
| **Matrimony full page** | **10,000** |

ISWARYA HOSPITAL

நலம் வாழ
www.iswarya.com

# ISWARYA Heart Centre

WORLD HEART DAY
*Wishes healthy heart for everyone.*

**Elite Cardiac Package at 50%***

*Valid till 25-10-2025

*T&C Apply




## Iswarya Heart Centre Welcomes best Cardiac team
• Trust us when every second counts •

### Interventional Cardiology
- Coronary Angiogram
- Coronary Angioplasty
- Complex Coronary Angioplasty
- Pacemaker
- Device Closure ASD / VSD / PDA
- ECMO / IABP

### Cardiac Surgery
- CABG
- Beating Heart CABG
- Valve replacement
- Lung Surgeries
- Pediatric Cardiac Surgeries



Prof. Dr. S. Rajasundram
MBBS.,MS.,MCh.,DNB.,FAIS.,FAMS.,
Surgical Oncologist
Director of Oncology
CEO, Iswarya Hospital



Dr. Arun Muthuvel
MBBS, MS (OBGYN),
MCh - Reproductive Medicine
Managing Director,
Iswarya Hospital



24/7 Emergency
**86 08 30 20 25 | 044 2025 2025**

For Appointment or Enquiry scan and connect.

**ISWARYA HOSPITAL**
110, Rajiv Gandhi Salai, OMR,
Taramani, Opp Tidel Park ,
Chennai – 41.


Exquisite gold & diamond collections
World Of Luxury
TIYARAA
GOLD | DIAMOND | UNCUT
No.100 Chamiers Road, Chennai
Phone: 9944939999, 9626687953
Rooted in the legecy of Amma Nana, I was inspired by the value of hardwork, trust and integrity. With a deep passion for jewelry, I founded Tiyaraa, a brand that blends timeless artistry with modern sophistication.

சென்னை மெட்டெக்ஸ் லேப் பிரைவேட் லிமிடெட்

# CHENNAI METTEX LAB PRIVATE LIMITED®

*Where Test Inspires Trust*

Mettex — Since 1984

**Accreditations | Approvals : ISO 17025 : 2017 NABL TC - 5589**

TC-5589 · BIS (Bureau of Indian Standards) · FSSAI (Food Safety and Standards Authority of India) · CPCB MoEF (Ministry of Environment, Forest and Climate change) · Gafta

**OUR SERVICES**

| CHEMICAL | MECHANICAL | BIOLOGICAL | ENVIRONMENTAL | FOOD | WATER |
|---|---|---|---|---|---|
| Metals & Non Metals, Spectro & Wet Analysis, Salt Spray Test, ROHS, Polymer Identification etc., | Tensile, Yield Strength, Elongation, Hardness, Micro/Macro Structure, Vickers Hardness Impact Test, Rubber Test etc., | Food & Agricultural products, Water & PDW, Marine / Aquaculture Products, Animal Food & Feed, Nutritional Supplements, IAQ & Swabs etc., | AAQ Monitoring, IAQ/Fugitive Monitoring, Stack Emission, Noise Level , Effluent & Sewage Water Analysis etc., | Nutrition Label, Shelf Life, Cooked Food, Fruits, Agri, Dairy, Animal Products, Flavours, Pesticides, Meat, Fish & Egg Products etc., | Drinking & Packaged Drinking Water, Raw water, Well & Bore well Water, RO & DM Water, Industrial Water, Waste Water, ETP & STP Water etc., |



- மஞ்சள் கிழங்கில் குர்க்குமின், நிலக்கடலை, வெங்காயம், கறிவேப்பிலை, முருங்கைக்கீரை போன்ற வேளாண் விளை பொருட்களையும் மற்றும் மீன், இறால் இறைச்சி போன்ற உணவுப் பொருட்களையும் ஏற்றுமதி செய்வோருக்குத் தேவையான ஆய்வுகள் செய்து சான்றிதழ் வழங்க APEDA, EIC, FSSAI, AGMARK போன்ற அரசு அமைப்புகளின் அனுமதியும் இங்கிலாந்து (UK) நாட்டின் GAFTA அமைப்பின் அத்தாட்சியும் பெற்ற ஆய்வுக்கூடம்.
- குடிநீர் ஆய்வு IS:10500, IS:14543-ன் படியும் கால்நடை தீவன ஆய்விற்கும் BIS அங்கீகாரம் பெற்ற ஆய்வுக்கூடம்.
- ஆட்டோமொபைல், இன்ஜினியரிங் தொழிலுக்கு தேவையான உலோக, அலோகப் பகுப்பாய்வுகள் இயந்திரவியல் சோதனைகள் செய்து சான்றளிப்பதில் 41 ஆண்டுகளாக முத்திரை பதித்த NABL அங்கீகாரம்பெற்ற ஆய்வுக்கூடம்.
- MoEF அங்கீகாரம் பெற்ற சுற்றுச்சூழல் ஆய்வுக்கூடம்.




SCAN FOR OUR NABL SCOPE

SCAN HERE TO CONTACT US

**பதிவு அலுவலகம் & மைய ஆய்வகம் :**
83, ஜோதி வளாகம், எம்.கே.என்.சாலை, கிண்டி,
சென்னை - 600 032. +91 44 2232 3163, 4217 9490
Mob : 98410 78949, 98411 37087

**கிளை ஆய்வகங்கள் :**
101, பாரதியார் சாலை, திருவி.க.தொழிற்பேட்டை,
ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 097. (TC-17166)

5/1, ஈடிசியா வளாகம், சென்னிமலை சாலை,
ஈரோடு - 638 001. Ph :0424 - 2272282
Mob : +91 9952949222, 89398 72544 (TC-14172)

7-109, ஜவ்வலப்பாலம் சாலை, பீமாவரம் -534204
ஆந்திரப்பிரதேசம். Ph :08816-246784 (TC-16433)

**கிளை அலுவலகங்கள் :**
மும்பை - +91 89398 72540
பாண்டிச்சேரி - +91 95512 50027
பெங்களூரு - +91 89399 90282
கோயம்புத்தூர் - +91 98410 53041

**மாதிரி சேகரிக்கும் மையங்கள் :**
குன்னூர் - +91 89398 72544, 89399 98324
தூத்துக்குடி - +919941131882
நாமக்கல் - +91 8939856450
நெல்லூர் - +91 9000614411
விசாகப்பட்டிணம் - +91 9030906630
காக்கிநாடா - +91 8978086356

ஆயுஷ் அமைச்சகம் அங்கீகாரம் பெற்ற சித்தா, ஆயுர்வேத மருந்து பரிசோதனைக் கூடம்

www.mettexlab.com test@mettexlab.com

**REGD. NEWS PAPER /**

Posted on

Posted at Egmore RMS/1 (Pattrika Chennai) | CHENNAI KONGU NANBARGAL MALAR / சென்னை கொங்கு நண்பர்கள் மலர்
Registration Number of the Newspaper: TNTAM/2016/69320 | Postal Reg No. TN/CH(C)/602/2025-2027
Date of Publication Second Week of every month




அனுப்புதல்
சென்னை கொங்கு நண்பர்கள் மலர்
கொங்கு நண்பர்கள் சங்கம்
வெள்ளி விழா இல்லம்
எண்.34, சீனிவாசப் பெருமாள் சன்னதி
முதல் தெரு, இராயப்பேட்டை,
சென்னை- 600 014.

பெறுநர்